பக்கங்கள்: இருபது

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 01 செவ்வாய்க்கிழமை (13-04-2004) தொலைபேசி - 2223378 ஒலி 116

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# கருணாவின் கட்டுப்பாட்டு பகுதி முழுமையாக புலிகள் வசம்

## 41நாள் நீடித்த நாடகம் மூன்று நாளில் முடிந்தது

(நமது விசேட நிருபர்)

மட்டக்களப்பில் கருணாவின் முக்கிய தளமாக அமைந்திருந்த 'தேனகம்' அரசியல் பணிமனையுட்பட, மட்டு-அம்பாறையில் கருணாவின் வசமிருந்த அனைத்துப் பிரதேசமும் விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமையகத்தால் வெற்றிகரமாக மீட்கப்பட்டுள்ளது.

41 நாட்கள் கருணாவின் கட்டுப்பாட்டில் இருந்த இப்பிரதேசங்கள் 72 மணித்தியாலங்களுக்குள் மீட்கப்பட்டு மக்கள் குடியமர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கருணாவும் அவரது குழுவினரும் தப்பியோடிவிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமையக மீட்புப் படை அணியினர் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை கருணாவின் பிடியில் சிக்கியிருந்த மட்டக்களப்பு மாவட்ட இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான வாகரைப்பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவந்தனர்.

இதனையடுத்து கருணாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய பிரதேசங்களைக் கைப்பற்றும் பொருட்டு விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட படைநடவடிக்கைகளையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொக்கட்டிச்சோலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அங்கு கருணாவின் முக்கிய தளங்களாக இருந்த கரடியனாறு, தேன

(20ஆம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வாசகர்கள், வர்த்தகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள் அன்புள்ளங்கள் அனைவருக்கும், எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்



## கருணா அணி எதிர்ப்பை கைவிட்டுப் பின்வாங்கி விட்டது

### எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகள் அமைப்பினால் விலக்கப்பட்ட கருணா அணியினர் தமது எதிர்ப்பைக் கைவிட்டு பின்வாங்கி விட்டதாக நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் எரிக்சோல்ஹெய்ம் மேலும் தெரிவித்திருப்பதா

(20ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்களை புதிய அரசு புலிகளுடன் விரைவாக ஆரம்பிக்க வேண்டும்

## இந்துமதத் தலைவர்கள் கூட்டாக வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

புத்தாண்டில் ஆட்சிக்கு வரும் புதிய அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டுமென்று, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக பரமாசாரிய சுவாமிகளும், சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்களும் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புத்தாண்டையொட்டி வெளியிட்ட நற்செய்தியிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

நாட்டில் நீடித்த அமைதி சமாதானத்தை ஏற்படுத்த புதிய அரசாங்கம் மக்கள் ஆணையை மதித்து நடக்கவேண்டும். இதற்கமைய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணும் வகையில் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம்உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இப் பேச்சுவார்த்தைகள் கடந்த காலத்தில் இடம்பெற்றதன் அடிப்படையில் நகர்த்தப்பட வேண்டும்.

அத்துடன் விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைக்கான நகலை அடிப்படையாகக் கொண்டே, தீர்வு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

நீண்ட காலமாக சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து, முகாம்களிலும் பிற இடங்களிலும் அல்லலபடும் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர இப்புதிய வருடத்தில் அரசாங்கம்விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைதி, சுபீட்சமான வாழ்வு இந்த மண்ணில் அனைவருக்கும் கிடைக்க அருளாசிகள் கிட்ட வேண்டுமென்றும் அச் செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (இ)



மலிவு விற்பனை மலிவு விற்பனை மலிவு விற்பனை

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

ராசீ சில்க்ஸ் ☎021 222 5573
70, 71A, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.

021 222 5571 ☎ நல்லி சில்க்ஸ்
121/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

♦ நவீன பாணியிலான ஆடைத் தினுசுகள், ♦ திருமண பட்டுச் சாறிவகைகள், ♦சோளிகிற், ♦ சேட்டிங், ♦ சேட்ஸ், ♦ ஸ்கேட் & பிளவுஸ், ♦ கவுண், ♦ சல்வார்கிற், ♦ இந்தியன் சாறிவகைகள், ♦ பேபி சூட், ♦ சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற றெடிமேற் ஆடைகள்

மற்றும் அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும் வருகை தாருங்கள்

SALE SALE SALE

# தரணியில் சாந்தி சமாதானம் நிலவ தாரண வருஷத்தில் பிரார்த்திப்போம்

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்பது எமது தினாந்தரப் பிரார்த்தனை "வையகமெல்லாம் துயர் தீர்க்கவே'' என்பது நாம் படிக்கும் திருமுறை. "பெருகலாம் தவம் பேதைமை தீரலாம் திரு கலாகிய சிந்தை திருத்தலாம்'' என்பது அப்பர் பெருமான் வாக்கு. இன்றைய தினத்தில் எமதுள்ளத்தில் இருத்த வேண்டிய வாசகங்கள் இவை.

## திருவருளை நோக்கி முன்னேறவேண்டும்

எங்கும் சிவமயம், எல்லாம் சிவமயம் எதிலும் சிவமயம் என்று எண்ணியெண்ணி இறும்பூது எய்த வேண்டுமானால் ஒவ்வொரு அடியும் திருவருளை நோக்கி வைக்கவேண்டுமென்பதற்குப் பயின்று கொள்ள வேண்டும்.

காலத்தை அளந்து அளந்து வாழுகின்றோம். அளவுக்கும் எமக்கும் சம்பந்தமில்லை என்றாலும் அது தானாகவே இயற்கை நியதிப்படி அமைந்து எம்மை விழிப்படையச் செய்கிறது. கடந்த ஆண்டு நாமாற்றிய தரமான கருமங்கள், த்வறான செயல்கள் புத்தாண்டில் நினைக்கப்பெற்று மேலும் தரமான பாதைக்கு வழிநடத்தத் தூண்டுகிறது.

ஒழுக்கமும் தெய்வ நம்பிக்கையும் இணைந்து இடைவிடாது முயற்சி செய்து வாழ்வை வளமாக்க உறுதிபூண வேண்டும். தெய்வ நம்பிக்கையுடையவர்களே நியாயத்துக்குக் கட்டுப்படுவார்கள். பிறர் துன்பங்கண்டு வருந்துவதோடு அதனைப் போக்கிடவும் முன்வருவார்கள்.

## இறை அன்புக்கு வழி

நமது சமயப் பெரியோர்கள் ஆத்மீகத் துறையில் எவ்வளவு உயர்ந்து நின்றார்களோ, அந்த அளவு மக்கள் தொண்டு செய்திருக்கிறார்கள். இதனால் இறைவனுடைய அன்புக்குப் பாத்திரரானார்கள். இந்த நிலை கைவருமானால் மற்றவர்களால் ஏற்படும் துன்பங்கள் எம்மை நலிவடையச் செய்ய மாட்டா. கோளறு பதிகம் இதனை அழகாகக் காட்டுகிறது.

''கோளரி யுழுவை யோடு
கொலையானை கேழல்
கொடுநோய் களான பலவும்
ஆளரி நல்ல நல்ல அவை
நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே''

என்பது ஞானவாக்கு. இவை எமது இல்லங்கள் தோறும் இடம் பெறவேண்டும்.

புதுவருடப் பிறப்பு என்றால் இறைவழிபாட்டுடன் பொங்கல் செய்து தாமுண்டு பிறருக்கு வழங்கலும் பெரியவர்கள் கையினால் பணம் பெற்று மகிழ்வதும் விருந்தயர்தலும் சுபநேரம் பார்த்துப் புதுக் கருமங்களை ஆரம்பிப்பதும் ஆலய வழிபாட்டைத் தவறாது செய்தலும் எமது பண்டுதொட்டுவரும் மரபாகும். இவற்றை வெறுஞ்சடங்காக மட்டும் மேற்கொள்ளாமல் உள்ளத்திலும் புதுமையுணர்வு ஓங்கி ''நானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைப்பேன்'' என்ற ஒரு திடசங்கற்பத்தை எடுத்துக் கொள்வது மேலானது. சிந்தனையிலும் செயலிலும் புதுமை காணவேண்டும்.

## அகத்திலே அன்பு கொண்டு வாழ்வோம்

"அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணி அரும்பசி எவர்க்கு மாற்றி மனத்துள்ளே பேதா பேதம் பொய், வஞ்சம், களவு, சூது, சினத்தையும் தவிர்ப்பாராகில் செய்தவம் வேறொன்றுண்டோ'' என்றார் ஒரு பெரியார்.

சமய வாழ்வு என்பது தனக்குத் தானே நற்சான்று பகர்வதிலேதான் வெற்றி காண்கிறது. கல்வி என்பது

**கலாநிதி
செல்வி தங்கம்மா
அப்பாக்குட்டி**

நீதி, சத்தியம், அறம் என்பவற்றின் சார்பிலே வளரவேண்டும். இன்று கற்றவர் மத்தியிலே பல ஊழல்களைக் காணுகிறோம். கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள் என்று சொல்ல நேரிடுகிறது.

ஆகவே புத்தாண்டை முன்னிட்டு எமது பணிகளை நல்லபடி வகுத்து தெய்வத்தை முன்வைத்து திருவருளைத் துணைகொண்டு அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் அகத்திலே அன்புங் கொண்டு வாழ வழிகாண்போமாக.

# இந்து வருடங்கள் அறுபதின் பொருள்

தொகுப்பு:- சி.சோதிகா பண்ணாகம்

'பிரபவ' - உயர்வான உதயம்
'விபவ' - ஒப்பில்லா பெருமை
'சுக்ல' - ஒளிமிகுந்த வானத்து வெண்மை
'பிரமோதூத' - உவகை பொங்கும்
'பிரஜாபதி' - உருவாக்கும் நாயகன்
'ஆங்கிரச' - திருமிக்கத் தவமுனி
'ஸ்ரீமுக' - உளமேற்கும்
'பவ' - உள்ளம் உள்ளது காட்டும்
'யுவ' - இளமை எழிலுறும்
'தாது' - இதயம் உவந்து தரும்
'ஈஸ்வர' - இறமை நிறைந்திடும்
'வெகுதான்ய' - இல்லம் செழித்திடும்
'பிரமாதி' - தலைமைதாங்கிடும்
'விக்ரம' - தைரியம் நிலைத்திடும்
'விருஷ' - நிலையுற நின்றிடும்
'சித்திரபானு' - நிறைந்த சித்திகள் விளங்கும
'சுபானு' - நன்மைகள் பொக்கிடும்
'தாரண' - இளமை பூண்டிடும்
'பராத்திப' - ஆளுமை கொண்டிருக்கும்
'விபய' - செலவிட செயல் தரும்
'ஸர்வஜித்' - தொட்டது துலங்கும்
'சர்வதாரி' - அணியெல்லாம் பூண்டிடும்
'விரோதி' - கெட்டது விரட்டிடும்
'விக்ருதி' - கேடுற்ற எழில்
'கர' - செயல் திறமுறும்
'நந்தன' - சேயெனக் கொஞ்சலுறும்
'விஜய' - நல்வருகை தந்திடும்
'ஜய' - நல்வெற்றி தந்திடும்
'மன்மத' - காதலுறக் கவர்ந்திடும்
'துர்முகி' - வெண்மை காய்ந்திடும்
'ஹேமப' - ஆடகப் பொன் போலும் நற்செயல்
'செயல் விளம்பி' - நாடலுறு சொல்
'விகாரி' - நாளின முறு அழகின் திரிபு
'சார்வரி' - எல்லையில்லா இன்ப ஒளி
'பிலவ' குகையுள் தோன்றிடும்
'சுபகிருது' - வகையுறு நலமே வளைந்திடும்
'சோப கிருது' வடிவுறு எழில் நிறைந்திடும்
'குரோதி' கடிந்திடும் கோபமுறும்
'விஸ்வாவசு' - படிந்திடும் அன்பில் பழகிடும்
'பராபவ' - வடிந்திடும் புகழில் வந்திடும் இகழ்
'பிலவங்க' - நீரைகடக்க உதவும் சாதனம்
'கீலக' - பழமையின் வடிவம்
'சௌம்ய' - பண்புறும் சாந்தம்
'சாதாரண' - சமத்துவம் சொல்லிடும்
'விரோதிகிருது' - வெறுப்பில் விளைந்திடும்
'பரிதாபி'- செய்தபின் வருந்திடும்
'பிரமாதீச' - பொறுப்பில் தலைமையெனும்
'ஆனந்த' - பொலிவொடு மகிழ்வுறும்
'ராட்சச' - கொடுமையே குணமெனும்
'நள' - பொதி நிலையில்லாக் குளிர்ச்சி
'பிங்கள' - கோலமிகு காவிய சாஸ்திரம்
'காளயுக்தி' - காலத்தில் அறிவுறுத்தும்
'சித்தார்த்த' - சிறப்புற சித்தி தரும்
'ரௌத்ர' - சீர்கெடும் சினமே
'துர்மதி' - தூண்டிவிடும் தீமைக்கு
'துந்திபி' - துய்ய நல் இசை தரும்
'ருத்ரோத்காரி' - கோபத்தின் விளைநிலம்
'ரக்தாஷி' - குருதியாய் சிவந்த கண்
'குரோதன' - விரோதத்தின் வேராகும்
'அஹ்ய்' - குறைவில்லாமல் நிறைவது

# தாரண வருட கைவிஷேசம்

**14.04.2004 புதன்கிழமை முற்பகல் 6.04மணி தொடக்கம்-முற்பகல் 6.52மணிவரை (வாக்கிய பஞ்சாங்கம்)**

**14.04.2004 புதன்கிழமை முற்பகல் 6.00மணி தொடக்கம் முற்பகல் 6.34மணிவரை (திருக்கணித பஞ்சாங்கம்)**

**16.04.2004 வெள்ளிக்கிழமை பின்னிரவு 5.21மணி தொடக்கம் வைகறை 6.09மணிவரை (திருக்கணித பஞ்சாங்கம்)**

**17.04.2004 சனிக்கிழமை காலை 6.33மணி தொடக்கம் முற்பகல் 7.45மணிவரை (திருக்கணித பஞ்சாங்கம்)**

# புத்தாண்டில் பூத்த மலர்கள்

## சிரித்து வா சித்திரைப் பெண்ணே

கயமைகள் கழிந்து புதுமைகள் செழித்து
நானில மெங்கணும் நல்லொளி வீச ~ பயம்
இனி இல்லை கெடுபகை இல்லை சொல்லிட இங்கே
இன்முகம் கொண்டு சிரித்துவா எங்கள்
~ சித்திரைப் பெண்ணே

மேதினி எங்கணும் மேன்மை கொள்
நீதியோடு நல்லாட்சி நிறைந்திட ~ போதி
மரத்து புத்தனின் போதனை, ஓங்கி
உரக்கவே இங்கு சிரித்துவா எங்கள்
~ சித்திரைப் பெண்ணே

இனங்களில் ஒற்றுமை கண்டிட வேண்டி
மனங்களில் மங்களம் கொள்வோம் ~ ஈனம்
அழிந்து எம் தமிழ் வாழ்ந்திட ~ நன்றே
செழிப்புடன் இங்கு சிரித்துவா எங்கள்
~ சித்திரைப் பெண்ணே

எஸ்.துரைமகள்

## தூது செல்ல வாராயோ

சித்திரை மகளே
சிங்கார தேவதையே
தூது செல்ல வாராயோ-தமிழன்
துயர் துடைக்க

துன்பமும் துயரமும்
தூரத்தே தூர்ந்துபோக
வேதனையும் சோதனையும்
வேகமாக ஓடி மறைய
சித்திரை மகளே
தூது செல்ல வாராயோ

கரவை எஸ்.பி.முரளி

## புத்தாண்டு மலர்கிறது

வீரமொடு புகழ் பூத்த ஈழத்திருநாட்டில்
தமிழ் மண்ணில் உதித்ததனால் அந்நியரால் நாம்
நெடுங்காலம் உற்ற அவலங்கள் மாய்ந்திட
துயருற்ற குடும்பங்கள் இனிதே இணைந்திட
சித்திரைப் பொன்மகள் வைகறையில் கண்மலர
இன்று தாரண ஆண்டு தரணியில் மலர்கிறது

நயினை விஜயன்

## தீர்வு தர வருக புத்தாண்டே!

பூரண அமைதி தொடர்ந்து நிலவிட
தாரண ஆண்டே வருக - தரணி
எங்கும் மக்கள் மனங்களில் மகிழ்வது
பொங்கத் தீர்வது தந்தே!

நாயன்மார்கட்டு
ப.மகேந்திரதாசன்.

# புதிய தாரண வருடப் பிறப்பு

**வாக்கிய பஞ்சாங்கம்**

சித்திரை மாதம் 01ம் திகதி (13.4.2004) செவ்வாய்க்கிழமை பி.ப.4.05மணிக்கு அபர பக்க நவமி திதியில், திருவோண நட்சத்திர இரண்டாம் பாதத்தில், சுக்கிர ஓரையில் சிங்க லக்கினத்தில் இப்புதிய தாரண வருடம் பிறக்கின்றது.

**திருக்கணித பஞ்சாங்கம்**

சித்திரை மாதம் 01ம் திகதி (13.04.2004) செவ்வாய்க்கிழமை மாலை 6.32மணிக்கு திருவோண நட்சத்திர மூன்றாம் பாதத்தில் கன்னி லக்கினத்தில் இப்புதிய தாரண வருடம் பிறக்கிறது

**சங்கிரம தோச நட்சத்திரங்கள்**

ரோகிணி, மிருகசீரிடம் 3,4ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் கால்கள், அத்தம், உத்தராடம் 2,3,4ம் கால்கள், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் கால்கள் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்து வழிபாடு செய்து புண்ணிய கருமங்கள் செய்தல் சிறந்தது.

**மருத்துநீர் தயாரித்தல்**

தாளம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவியார், செங்கழுநீர், வில்வம், அறுகு, பீக்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திப்பலி, சுக்கு இவைகளை சுத்தமான நீரில் காய்ச்சிக் கொள்க.

**கடைப்பிடிக்க வேண்டியவை**

13.04.2004 பிற்பகல் 12.05மணி தொடக்கம் முன்னிரவு 8.05 மணிவரை புண்ணிய காலமாகும். இப் புண்ணிய காலத்தில் யாவரும் சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் விளாவிலையும் காலில் கடப்பமிலையும் வைத்து ஸ்நானம் செய்து சிவப்பு நிறமுள்ள ஆடையாயினும் அல்லது இந்நிறக் கரையமைந்த ஆடையாயினும் தரித்து ஆபரணங்கள் அணிந்து விநாயகரை வணங்கி, தத்தம் வீடுகளில் சூரியனுக்குப் பொங்கல், பூசைகள் செய்தும், இயன்ற தானதருமம் செய்தும் குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசிபெற்று அறுசுவை உண்டிகளுடன் போசனம் செய்து தாம்பூலம் அருந்தி நற்கருமங்களை சிந்தித்து

# இன்று ஒரு தகவல்

## கடவுள் பயம்

"தெய்வத்திற்குப் பயந்து நடந்து கொள்" என்று சொல்கின்றார்களே. அந்தத் தெய்வம் தேவைதானா என்று ஒரு பெரியவரைப் பார்த்துக் கேட்டார் ஒருவர். "கடவுளைப் பயத்தின் மூலமாக அடையவே முடியாது" என்று பதில் சொன்னார் அந்தப் பெரியர். அதற்கு உதாரணமாக ஒரு கதையையும் சொன்னார்.

ஒரு பிச்சைக்காரன் அநாதைச் சிறுவன் ஒருவனை வளர்த்துக்கொண்டிருந்தானாம். அவர்கள் இருந்த குடிசைக்குப் பக்கத்தில் ஒரு சுடுகாடு இருந்ததாம். இந்தச் சிறுவன் இரவு வேளையில் அந்தச் சுடுகாட்டின் பக்கம் போய்விடக் கூடாது எனபதற்காக அந்தப் பையனிடம் பிச்சைக்காரன் சொன்னான் "இதோ பார் இரவு வேளையில் அந்தச் சுடுகாட்டின் பக்கம் போனால் அங்கே இருக்கும் பேய்கள் உன்னைப் பிடித்துத் தின்றுவிடும்" என்று கூறிப் பயமுறுத்தி வைத்தான்.

அந்தப் பையன் படித்து இளைஞனாக வளர்ந்துவிட்டான். இருந்தாலும் இன்னும் அவனுக்குப் பேய்பற்றிய பயம் ஓயவில்லை. ஒருநாள் பிச்சைக்காரன் அந்தப் பையனை ஒரு வேலை காரணமாக வெளியூருக்கு அனுப்பவேண்டி வந்தது. அவன் அந்தச் சுடுகாட்டைத் தாண்டிப் போகவேண்டும். இரவு நேரம் இவன பயந்து நடுங்க ஆரம்பித்துவிட்டான். இப்போது என்ன செய்யலாம் என்று யோசித்தான் அந்தப் பிச்சைக்காரன்.

ஒரு தாயத்தை எடுத்தான். அவனது கையில் அதைக் கட்டினான். கட்டிவிட்டு " இனிமேல் அந்தப் பேய் உன்னை ஒன்றும செய்யாது. கடவுள் அந்தப் பேய்களிடமிருந்து உன்னைக காப்பாற்றுவார்" என்றான். இப்போது அந்த இளைஞனுக்கு தைரியம் வந்தது. துணிவாகக் கிளம்பி வந்தான். அபபடிப் போகும்போது யோசித்தான். "இப்போது நாம் பேய்களைப பார்த்துப் பயப்படுகிறோம். இந்தப் பேய்களே கடவுளைப் பார்த்துப் பயப்படுமென்றால் அந்தக் கடவுள் எவ்வளவு பெரிய பேயாக இருக்கவேண்டும்" என்று நினைக்க ஆரமபித்தான். உடனே பேயின் பயத்தைவிட கடவுள் பயம் அதிகமாகிவிட்டது. அதே பயம் கடவுளின் தரகர்கள் போல் நடிக்கும் போலி மனிதர்கள் மீதும் உருவானது. பாவம் அவன் இரவில் பேய்க்காகப் பயந்தான். பகலில் மகா பேயான கடவுளுக்காகப் பயந்தான்.போலிச் சாமியார்களைப் பார்த்தும் பயப்பட ஆரம்பித்தான்.

இப்போதுதான் அந்தப் பிச்சைக்காரன் விபரீதத்தை உணர்ந்தான். அந்த இளைஞன் கையில் கட்டியிருந்த தாயத்தைக் கழற்றி அவனுக்கு முன்னால் வைத்து அடுப்பில் வீசினான். அன்றிரவே அவனை அழைத்துக்கொண்டு அந்தச் சுடுகாட்டிற்குப் போனான். அங்கே பேய் பிசாசு எதுவுமில்லை என்பதைச சுட்டிக்காட்டினான். எதற்காக பேயைப் பற்றிச் சொன்னேன. எதற்காகத் தாயத்துக் கட்டிவிட்டேன் என்ற உண்மையை விபரமாகக் கூறினான். அந்த இளைஞனின் மனதில் தெளிவு உண்டானது. அவன் மனதிலிருந்த பேய் பிசாசு எல்லாம் போய்விட்டது. பயத்தினால் உருவான போலிக் கடவுளும் போய் வருகிறேன் என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

மனிதனுக்குத் தான் என்ற எண்ணம் இருக்கிறது பாருங்கள். அதனால் உருவாகும் துன்பங்கள், கவலைகள், பாதுகாப்பற்ற நிலை, மரண பயம் போன்றவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ள கடவுளே கதி என் சரணாகதி நிலையைப அவன் உருவாக்கிக் கொள்கிறான் என்கிறார் அந்தப் பெரியவர்.

இது ஒருபக்கம் இருக்கட்டும். இந்தக் காலத்தில் பேய் பிசாசுகள் எல்லாம் மிகவும் சர்வசாதாரணமாகிவிட்டது. ஒருநாள் ஒருவரைப பார்த்து "ஏன்சார்? நீங்கள் பேயைக் கண்ணால் பார்த்திருககிறீகளா?" என்று கேட்டேன். அவர் மெதுவாக என்னிடம் வந்து "என்ன அப்படிக் கேட்கிறீகள். நான் பேயுடன் தானே 30 வருடங்களாகக் குடும்பம் நடத்திக் கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

## இடம்பெயர்ந்தோர் பிரச்சினை குறித்து திருமலையில் ஆராய்வு

(திருகோணமலை)

மட்டக்களப்பு வாகரை, சேரு வல, வெருகலாறு, கஞ்சிகுடாச் சாறு, போன்ற பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து திருகோணமலை மற்றும் அம் பாறை மாவட்டங்களில் தங்கி யுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகள் குறித்து ஆராயப் பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட கூட்டம் திருகோணமலையில் உள்ள வடக்கு- கிழக்கு மாகாண ஆளு னர் அலுவலகத்தில் நடைபெற் றது.

வடக்கு- கிழக்கு மாகாண ஆளுனர் அபசோகா ஜய வர்த்தன தலைமையில் நடை பெற்ற இக் கூட்டத்தில், ஜனாதி பதியின் ஆலோசகர் பாலபத்த பெண்டி தலைமையி லான குழு வினர் கலந்து கொண்ட னர்.

இடம் பெயர்ந்து வாழும் மக்களின் சுகாதார, மருத்துவ வச திகள், அன்றாடப் பிரச்சினைகள், என்பன குறித்து இக் கூட் டத்தில் விரிவாக ஆராயப்பட்டன.

இக் கூட்டத்தில்,ஆளுனர் நிதியில் இருந்து10 மில்லியன் ரூபா நிதியை பெற்றுத் தருவதாக ஜனாதிபதியின் ஆலோசகர் உறுதிய

(தி-63)

---

தடுத்துவைக்கப்படுவோர் மீது மேற்கொள்ளப்படும்

## சித்திரவதை முறைப்பாடுகள் குறித்து ம. உ. ஆ. கு. உடன் விசாரணை

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்களில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் சித்திரவதை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படும் பட்சத்தில் ஒருமாத காலப்பகுதியில் அந்த முறைப்பாடுகள் பற்றி விசாரணை மேற்கொள்ளப்படும் என்று தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறு பொலிஸாரினால் சித்திரவதை செய்யப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்யும் பட்சத்தில் அவர்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு அழைத்து விசாரணை செயயப்படும்.

அத்துடன் சட்டமருத்துவ அதிகாரியின் அறிக்கையொன்றும் பெற்றுக்கொள்ளப்படும்.

அதன் பின்னர் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுகக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை செய்யும்.

அத்துடன் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு ஆலோ சனைகளை வழங்வுள்ளதாகக் கூறப்படுகின்றது.(உ-60,10)

## ஆங்கில மொழிக் கல்வியை நீக்கக் கோரி அரசாங்கத்திற்கு ஜே. வி. பி அழுத்தம்

(கொழும்பு)

அராசாங்கப் பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலக் கல்வியை ஐ.தே. மு அரசாங்கம் அறிமுகப்படுத்தியிருந்தது. அதனைப்புதிய அரசாங்கம் தொடருமா என்பது குறித்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. முன்னாள் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு இது பற்றித் தெரிவிக்கையில், எமது அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில மொழிக் கல்வியை நீக்க வேண்டுமென ஜே.வி.பியினர் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருவது குறித்து நாம் ஏமாற்ற மடைந்துள்ளோம்.

ஆங்கிலக் கல்வியை நீக்குவது எதிர்கால மாணவர் சமுதாயத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடியது. ஏனெனில் இது உலகமயமாக்கப்பட்ட சமுதாயம். சர்வதேச சமூகத்துடன் தொடர்புகொள்ள ஆங்கில அறிவு அவசியம்.மேலும் இத்திட்டம் நீக்கப்படுமானால் தனியார் துறையினர் பெருமளவு இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடியதாக இருக்கும். அரச துறையினர்க்கு இது சாத்தியமற்றதாய் போய் விடும். இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போது பல எதிர்ப்புகள் கிளம்பின.

எமது அரசாங்கம் பட்டதாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆங்கிலப்பயிற்சியை வழங்கி வந்தது. இதனால ஆங்கில மொழிமூல கற்பித்தல் அவர்களுக்கு சுலபமாகியது. இந் நாட்டின் ஒவ்வொரு குழந்தைகளும் தாம் விரும்பிய மொழியில் கல்வி கற்பதற்கு உரிமையுண்டு. இதனை எந்த அரசாங் கமும் மறுக்கமுடியாது. இவ்வாறு கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார். (த-6)

## இராசி பலன்

**13.04.2004**

**(சித்திரை 1, செவ்வாய்க்கிழமை)**
**நவமி முன்னிரவு 10.10 வரை**
**உத்தராடம் முற்பகல் 7.59 வரை**
**இராகுகாலம் 3.05-4.35 வரை**
**சுபநேரம் 10.36-12.06 வரை**

***தமிழ், சிங்கள வருடப்பிறப்பு***

**மேடம்**
உற்சாகம், காரிய சித்தி, அதிகாரம், தொழில் நன்மை.

**இடபம்**
அதிக செலவு, முயற்சி தாமதம், கட்டுப்பாடு, போசன சுகம்.

**மிதுனம்**
எதிர்பாராத மனஸ்தாபம், உடல்நலக் குறைவு, காரிய தடங்கல், பிறருக்கு உதவுதல்.

**கடகம்**
கௌரவமான நிலை, நணபர்கள சந்திப்பு, காரிய அனுகூலம், தெய்வ தரிசனம்.

**சிங்கம்**
பிறர் உதவி, பகைவர் நேசம், காரிய அனுகூலம், பிரயாணம்.

**கன்னி**
அமைதிக்குறைவு, காரிய தாமதம், புதிய விடயம், நண்பர்கள் சந்திப்பு.

**துலாம்**
மனச்சோர்வு, தாய்வழி உறவு, காரிய தாமதம், நண்பர்கள் சந்திப்பு.

**விருச்சிகம்**
கூட்டு முயற்சி, உறவினர் சந்திப்பு, பொருள் சேர்க்கை, தெய்வசிந்தை.

**தனுசு**
விதண்டா வாதம், அதிகாரம், பிரயாணம், பண விரயம்.

**மகரம்**
தெய்வசிந்தை, காரிய நன்மை, உறவினர் சந்திப்பு, விருந்துபசாரம்.

**கும்பம்**
பிரயாணம், சுபசெலவு, தொழில் சிந்தை, முயற்சி தாமதம்.

**மீனம்**
நல்லசம்பவம், கலந்துரையாடல், கீர்த்தி, தெய்வ சிந்தை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

***வளவன்***

## யுத்த நிறுத்த உடன்படிக்கையை புலிகள் மீறிவிட்டனராம்

**குற்றம்சாட்டுகிறது ஹெல உறுமய**

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குள்ளே நடைபெறும்உள்ளகத் தகராறு கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை செய்துள்ளது.

இவர்களுக்கிடையிலான இந்தச் சண்டை யுத்த நிறுத் உடன்படிக்கையை மீறும் செயலாக அமைந்துள்ளது என்றும் இந்தக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை, இதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியையும் பிரதம மந்திரியையும ஜாதிக ஹெல உறுமய கேட்டுக்கொண்டுளளதும் குறிப்பிடத்தக்கது. (உ-121)

## தனித் தமிழீழம் அமைவதை அனுமதிக்கப் போவதில்லை

**அகில இந்திய காங்கிரஸ் அறிக்கை**

(சென்னை)

இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கான தனிநாடு ஒன்றை அமைக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முயற்சியை தாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என அகில இந்தியக் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள், பாது காப்பு மற்றும் அரசியல் நடவடிக்கைகள் தொடர் பாக இந்தியக் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாட்டில் எம்முடன் திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிடமுன்னேற்றக் கழகம் என்பன கூட்டமைப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. இக் கூட்டுக்கட்சிகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் தாயகக் கோட்பாட்டை ஆதரிக்கின்ற போதிலும், நாம் தமிழ் மக்களுக்கு தனிநாடு அமைவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. ஒன்றுபட்ட இறைமையுடனான இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதே இலங்கை குறித்த எமது நிலைப்பாடும என குறிப்பிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது. (உ-4,63,67)

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயற்குழுவை உடன் கூட்டுக! ஜே.வி.பி அவசர கடிதம்

(புத்தளம்)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயற்குழுவை உடனடியாகக் கூட்டுமாறு கோரி மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) நேற்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. பிரதமர் நியமனம் மற்றும் அமைச்சர்களின் செயலாளர்கள் நியமனம் ஆகியவற்றில் தமது கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படாமல் அவை புறம்தள்ளப்பட்டமைக்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையிலேயே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமது கட்சிக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பதவிகளை வேறு எவருக்கும் வழங்கக் கூடாதெனவும் அந்தக் கடிதத்தில் ஜே.வி.பி. குறிப்பிட்டுள்ளது. (உ-15)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி. பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

102

## ஐந்தாம் பகுதி

## இஸ்லாமியரின் சட்டம்

## 1. இலங்கையில் முஸ்லிம்கள்: சில வரலாற்றுக் குறிப்புகள்

காலாகாலமாக அங்கு சென்று வாணிபம் செய்த வியாபாரிகள் தங்கி குடித்தனம் மேற்கொள்வதாலும், போர்த்துக்கேயரின் கெடுபிடிகளின் விளைவாக இலங்கையின் பிறபகுதிகள் சிலவற்றிலுள்ள முஸ்லிம்கள் அவற்றிலிருந்து வெயியேறிக் கிழக்கிலங்கையிற் புகலிடம் தேடிக் கொண்டதாலும் மட்டக்களப்பில் முஸ்லிம்களின் குடியிருப்புக்கள் பெருகலாயின அத்துடன் அங்கு வாழ்த்த தமிழரிற்கு சில பிரிவினர் இஸ்லாமியராகி விட்டதற்கான அறிகுறிகள் உண்டு. கிழக்கிலங்கையிற் பரந்த வயல் வெளிகளையும் தோப்புகளையும் .உடைமைகளாகக் கொண்ட முஸ்லிம் குடியிருப்புகள் வளர்ச்சி பெற்றன. அவை விவசாயத்துடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தன.

போர்த்துக்கேயரின் ஆட்சி முடிவுற்ற காலத்தில் வடமேற்கில் உள்ள ஏழு கோறளையிற் கண்டி மன்னனின் ஆதிக்கம் ஏற்பட்டது. அப்பிரதேசத்தின் பிரதானமான துறைமுகப் பட்டினங்களான புத்தளம், கற்பிட்டி என்பவற்றில் முஸ்லிம்களும் தமிழரும் குடிகளாயிருந்தனர். மிகப்பரந்த பிரதேசமான ஏழு கோறளையில் உற்பத்தியான நெல்லினையும் பாக்கினையும் பெரும்பாலும் முஸ்லிம் வியாபாரிகளே கரையோரப்பட்டினங்களுக்கு ஏற்றிச் சென்றனர். தென்னிந்தியக் கப்பல்கள் வாணிபத்தின் பொருட்டு அங்கு போவது வழக்கம்.

புத்தளத்து முக்குவரிற் பெரும்பாலானோர் இக்காலமளவில் இஸ்லாமியராகி விட்டனர் என்பதை ஒல்லாந்தரின் ஆவணங்கள் சிலவற்றால் அறிய முடிகின்றது. நவரத்தின வன்னியன் என்னும் பதவிப்பெயர் கோட்டை மன்னரின் காலத்தில் முக்குவரின் அதிபனுக்குரியதாகும். கண்டி மன்னர் காலத்தில் அப் பதவிப்பெயரைப் பரம்பரை உரிமையாகப் பெற்றிருந்த குறுநில மன்னர் முஸ்லிம்களாய் இருந்தமை கவனித்தற்குரியது. அவன் புத்தளம் திசாவையின் அதிகாரத்திற்குள் அடங்கியிருந்தான். முஸ்லிம்கள் வாழுஞ் சில கிராமங்களுஞ் சில சிங்கள்க்கிராமங்களும் அவனுடைய அதிகாரத்தின் கீழ் இருந்தன.

மலைப்பிரதேசத்திலும் புத்தளத்திலும் வாழ்ந்த முஸ்லிம்களை மடிகைபத்த என்ற தொகுதியில் அடங்கியிருந்தனர். மீனவராகிய சிங்களவரும் அதனுள் அடங்கியிருந்தனர். அத்தொகுதியைச் சேர்ந்த முஸ்லிம்களும் சிங்களவரும் வியாபாரம் தொடர்பான சேவை களை அரசாங்கத்திற்குச் செய்ய வேண்டும். அத்துடன் அரசனுக்குரிய வயல் நிலங் களிலிருந்தும் தானியத்தை நெற்களஞ்சியங்களுக்கு எடுத்துச் செல்வதற்குப் பொதிமாடுகளைச் சேவைக்கு விடவேண்டும். மடிகைபத்தவைச் சேர்ந்த முஸ்லிம்களைச் சுலன்பத்தமடிகை என்று சொல்வது வழக்கம். திசாவை ஒருவனின் அதிகாரத்தின் கீழ் மடிகைபத்த அமைந்திருப்பது வழமை. கீர்த்தி ஸ்ரீராஜசிங்கனின் ஆட்சியில் (1747-81) ஷேயிக் ஆலிம் என்பவர் மடிகைபத்த நிலமை என்னும் பதவியைப் பெற்றிருந்ததாகச் சொல்லப்படுகிற்ன்றது. அதற்குப் பின் ஏழு கோறளையில் மடிகை திசாவை என்னும் பதவியை மகுல முகாந்திரம் என்னும் முஸ்லிம் ஒருவருக்கு வழங்கியிருந்தார்கள். மலை நாட்டிற் சில கிராமங்களில் முஸ்லிம் குடிகள் பெரும்பான்மையினராகக் காணப்பட்டனர். அக்குறானை அவற்றுள் ஒன்றாகும். தும்புலுவாவ, ஹிங்குல போன்ற கிராமங்கள் பலவற்றிலே பெரும்பான்மையான சிங்களக் குடிகளோடு முஸ்லிம்களின் குடியிருப்புகளும் இருந்தன. கிராம மட்டத்தில் முஸ்லிம்களுக்கெனத் தனியான அதி காரிகள் நியமனம் பெற்றிருந்தனர்.

முகாந்திரம், லேகம், தலைமைக்காரன் முதலிய பதவிகளிலுள்ளோர் எல்லோரும் மடிகைபத்த என்பதற்குப் பொறுப்பான மேலதிகாரியிடமிருந்து நியமனங்களைப்பெற்றனர்.

சிங்களவரைப் போலவே முஸ்லிம்களும் குடியிருப்பதற்கான நிலங்களை அரசனிடமிருந்து பெற்றுள்ளனர் என்று கருதப்பட்டதால், அவர்களும் ஏனைய குடிகளைப் போல வருடந்தோறும் குறிப்பிட்ட காலத்திற்கு இராசசேவை (இராசகாரியம்) செய்ய வேண்டும் என்பது நியதி. அவர்களின் வழமையான தொழில் வியாபாரம் என்பதால் அவர்கள் புரிய வேண்டிய சேவையும் வாணிபம் தொடர்பானதாகும்.வாணிபத்தில் அரசனது ஏகபோக உரிமையான பொருட்களின் வியாபாரந் தொடர்பாக முஸ்லிம்களின் சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

பாக்கு வியாபாரம் கண்டியில் அரசனுடைய ஏகபோக உரிமையாகும். குடியானவர்களிடமிருந்து பாக்கினைக் கொள்வனவு செய்வதற்கென்று முஸ்லிம் முகாந்திரம் ஒவ்வொருவனுக்கு வருடந்தோறும் முற்பணமக 300 ரிதி வெள்ளிக்காசு கொடுக்கப்படும். அதனைக் கொண்டு 50 அமணம் பாக்கினை வாங்க முடியும். வியாபாரிகள் வீடு வீடாகச் சென்று பாக்கினை மிகக்குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்தனர். அவ்வாறு சேகரிக்கப்படும் பாக்கு பொதிமாடுகள் மூலம் ருவான்வெலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அதிக இலாபத்திற்கு விற்கப்படும். அது அங்கிருந்து கொழும்புச் சந்தைக்கு ஏற்றிச் செல்லப்பட்டது. அரசாங்கத்திடமிருந்து முற்பணம் பெற்ற வியாபாரிகள் , 600 ரிதி பணத்தைத் திறைசேரியில் ஒப்படைக்கவேண்டும். இலாபமாகக் கிடைத்த எஞ்சிய முதல் அவர்களுக்கு உரியதாகும்.

முற்பணத்தைப் பெறும் வியாபாரிகள் புத்தளம், சிலாபம் முதலான கரையோரப் பட்டினங்களுக்குச் சென்று அங்கு உப்பு, கருவாடு, துணிவகைகள் முதலியவற்றைக் கொள்வனவு செய்வர். அப்பொருட்களைக் குடியானவர்களிடம் பண்டமாற்று முறையிலும் விநியோகம் செய்தனர். சில குடியானவர்கள் தோப்பு நிலங்களில் உற்பத்தியான பாக்கினைக் கொடுத்துத் தமக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

நிலமானியங்கள் மூலமாகப் பௌத்தப் பள்ளிகளுடன் முஸ்லிம் தொடர்புகொள்ள நேர்ந்தது. பௌத்தப் பள்ளிகளுக்கு அரசர்கள் கிராமங்களை மானியமாக வழங்குவதுண்டு. அவ்வாறு கொடுக்கப்பெற்ற கிராமங்கள் விகாரகம் என்று சொல்லப்படும்.விகாரகம் சங்கநாயகரின் உடைமையாகக் கொள்ளப்படும். பொதுவாக ஒரு கிராமத்தில் ஐந்திலொரு பகுதி நிலமே அரசனுக்குரியதாயிருக்கும். கிராமமொன்று விகாரகம் என மாற்றம் பெறுமிடத்து, அரசனுக்குரிய அதிலுள்ள பங்கு மட்டுமே சங்கத்தாரின் உடைமையகும். அதிலடங்காத நிலப்பகுதியிற் பல நிலப் பங்குகள் இருக்கும். ஒவ்வொரு நிலப்பங்கும் பங்குக்காரர் ஒவ்வொருவருக்கு உரியதாகும். பங்குக்காரர் பூர்வசாரத்தின் படி பள்ளிக்குச் சேவை புரிதல்வேண்டும். விகாரைகளுக்குரிய கிராமங்கள் சிலவற்றில் நிலப்பங்குகள் சில முஸ்லிம்கள் வசமிருந்தன. அவர்களுக்குரிய பங்கினைப் படவிலிப்பங்கு என்று சொல்வது வழமை. வயல்களில் விளைந்த நெல்லைக் களஞ்சியத்திற்கு ஏற்றிச் செல்வது படவிலிப் பங்குக்காரரின் கடமையாகும். சில சமயங்களில் உப்பு, கருவாடு போன்ற பொருட்களை முஸ்லிம் வியாபாரிகள் விகாரைகளுக்குக் கொடுத்தார்கள். (தொடரும்)

## தென்கொரிய வர்த்தகர்கள் இலங்கை வருகின்றனர்

(கொழும்பு)

தென்கொரியவைச் சேர்ந்த 10 அங்கத்தவர்கள் கொண்ட வர்த்தகத் தூதுக்குழு எதிர்வரும் 22ஆம திகதி இலங்கை வரவுள்ளது.

புடவைக் கைத்தொழில், அழகு சாதனப் பொருட்கள், நெசவுத் தொழில உப்பப் பலதரப்பட்ட தொழிற் துறையைச் சேர்ந்த வர்த்தகப் பிரதிநிதிகள் இந்தக் குழுவில் இடம் பெற்றிருக்கின்றனர்.

கொழும்பில் உள்ள கொப்றா எனும்வர்த்தக நிறுவனத்தின் பிரதிப் பணிபாளர் யு.யொ.ர்.கு, தென்கொரிய நாட்டு வர்த்தகப் பிரதிநிதிகளின் இலங்கை விஜயம்குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

தென்கொரியவிற்கும்- இலங்கைக்கும் இடையேயான வர்த்தக உறவை வலுப்படுத்துவதற்காகவே இவர்கள் இலங்கை வருகின்றனர்.

இவ்வாறு இரு நாடுகளுக்கும இடையிலான வர்த்தக உறவு வலுப்படும் போது, இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைக்கு கொரியாவில் நல்ல சந்தை வாய்ப்புக் கிடைக்கும் என்றும் தெரிவித்தார். (உ-60,10)

## ஆஸி. உயர்ஸ்தானிகருடன் பிரதமர் மகிந்த சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கும், அபிவிருத்திப் பணிகளுக்கும் தமது அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் என இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் எட்வேட் பின்ஸ் உறுதியளித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருக்கும் இடையே பிரதமரின் பிரத்தியேக இல்லத்தில் சனிக்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இவ் உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக மற்றும் இராஜாங்க உறவுகள் குறித்து ஆராயப்பட்டன.

இதன்போது புதிய பிரதமராக மகிந்தராஜபக்ஷ பதவி ஏற்றிருப்பது குறித்து அவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். (கி-63)

## தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழ்ச்செல்வன் சந்திப்பு தாமதம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு தற்போதைக்கு இடம்பெறும் சாத்தியம் இல்லையெனத் தெரியவருகிறது.

மேற்படி சந்திப்பானது புது வருடத்திற்கு முன்பதாக கிளிநொச்சி நடுவப்பணியகத்தில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும், மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளுக்கும் கருணா தரப்புக்கும் இடையே மூண்டுள்ள நேரடிச் சண்டையை அடுத்தே இச்சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (உ)

## அமைச்சுப் பதவியேற்ற பௌசி அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார்

(கொழும்பு)

சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சராகப் பதவி ஏற்றுள்ள ஏ.எச்.எம். பௌசி நேற்று முன் தினம் காலை தமது அமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

தமது அமைச்சின் கடமைகள் பற்றி அதிகாரிகளுக்கு விளக்கிக கூறிய அமைச்சர் ஏ.எச.எம. பௌசி, சுற்றாடல் மிகவேகமாக மாசடைந்து வருவதாகவும் அதனைக் கட டுப்படுத்துவதறகாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனறும கூறினார்.

எதிர்வரும் 14ஆம் திகதியில் இருந்து தமது கடமைகளைப் பொறுட்பேற்கப் போவதாகவும், அன்றிலிருந்து சுற்றாடல் மற்றும இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் படிப் படியாக மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-60,10)

## வங்கிக் கணக்குகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சர்வதேச அணுசக்தி தொழில்நுடப உபகரணங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்தார் என குற்றம சாட்டப்பட்ட இலங்கை வர்த்தகர் புஹாரிஆபூர் சாகித்தின் சகல வங்கிக கணக்குகளையும் இடைநிறுத்தும் படி ஐக்கியஅரபுகள் எமிரேட் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அணுசக்தி தொழில்நுட்ப உபகரணங்களை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்தார் என்று குற்றம்சாட்டி இவர் மீது அமெரிககா அணமையில் வழக்குத்தாக்கல் செய்திருந்தது.

அந்த வழக்கு விசாரணை நடவடிககையின் ஒரு பகுதியாகவே அவரது வங்கிக் கணக்குகள் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கின்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-60,10)

## மானிய உதவிக் கொடுப்பனவுப் புத்தகம்

(தொல்புரம்)

மூளாயில் உள்ள சிறுவர் கல்விக்கும பால் நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தினரால் மேற்கொள்ளபபடும் ஆலயங்களினூடாக அபிவிருத்தியின் நுழைவாயில் திட்டத்தின் கீழ் மூளாய் வரதன்புலோ ஸ்ரீமுத்துக்குமார சுவாமி கோயில் சுற்றாடலில் உள்ள தெரிவு செய் யபபட்ட 12 பயனாளிகளுக்கு அண்மையில மானிய உதவிக் கொடுப் பனவுப் புத்தகம் வழங்கப்பட்டது. (உ-70)

## விபரத்திரட்டு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 29 கிராம அலுவலர் பிரிவுகளில் பெண் தலைமைதுவக் குடும்பங்கள், வலுவிழந்தோர், கிராம மட்ட அமைப்புகள் என்பவற்றின் விபரங்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உத்தியோகத்தர்கள் திரட்டி வருகின்றனர். (உ-58)

## முதியவர் குத்திக் கொலை

(கொழும்பு)

இரத்தோட்ட கல்மடுவ நாகலத் தோட்டத்தில் முதியவர் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் ,இவருடன் சென்ற மற்றொரு முதியவா படுகாயஙகளுடன் கண்டி வைத்திய சாலையில் அனும்திக்கப்பட்டுள்ளார். மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த ஐயாத்துரை முத்துக்குமாா என்பவரே இவ்வாறு குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கர வண்டி ஒன்றில் பயணம் செய்த இவ்விரு நபர்களுக்கும சாரதிக்கும் இடையே ஏற்பட்டவாய்த்தர்ககம் காரணமாகவே இவர் குத்தி கொலை செய்யப்பட்டதாக தெரிய வருகிறது. (கி-63)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2004

புதுப்பொலிவுடன் விளங்கும் சித்திரைப் புத்தாண்டு நன்நாளில் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
- சேட் வகைகள்
- T.சேட் வகைகள்
- சல்வார் கிற்
- சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற றெடிமேற் ஆடைகள்
- மற்றும் அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும்

உங்கள் தெரிவு



## மகாராணி பட்டுச்சோலை

50, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 3104

அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

எம்மிடம் சகலவிதமான மின்சார உபகரணங்கள், மின் இணைப்புக்குரிய பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், பற்றறி வகைகள், காலணி வகைகள் செல்காஸ் (சமையல் வாயு) அன்ரனா பைப் வகைகள் யாவற்றையும் ஒரே இடத்தில் வாங்க நாடவேண்டிய இடம்

## விதுஜா சுப்பர் மார்க்கட்

இணுவில் சந்தி, இணுவில்.

தொ. பே. 021 222 7746

அனைவருக்கும் எம் இதயம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## திருவருள் ஸ்ரோர்ஸ்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான கட்டடப் பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**THIRUVARUL STORES**

இல. 2 கண்டி வீதி, கொடிகாமம்.

**IIS**இன் இதயம் கனிந்த புதுவருட வாழ்த்துக்கள்

எமது அன்பிற்குரிய மாணவர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், நலன் விரும்பிகள் மற்றும் ஏனைய அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

- Institute of Informaties Studies
- PC Paradise
- Sun Computers
- IIS Office Automation

# லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்



## குகன் ஸ்ரோர்ஸ்

பலாலி வீதி, திருநெல்வேலி.

கடந்த 03.04.2004 அன்று எமது ஸ்தாபனத்தின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி எமது ஸ்தாபனம் சிறப்பாக இயங்க ஆதரவு தந்த அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வாடிக்கையாளர்களின் நலன்கருதி எமது ஸ்தாபனம் தினமும் அதிகாலை 4 மணிமுதல் இரவு 11மணிவரை சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதையும் எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். சகலவிதமான எரிபொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

T.P. 021 222 5968

**KUGHAN STORES**
**LANKA FILLING STATION**
**PALALY ROAD, THIRUNELVELY.**

# புத்தாண்டுச் சிறப்புமலர் - 2004


அனைவருக்கும் எம் இதயம் கனிந்த சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

*For All Your IT Solutions*

Microsoft. Verbatim ASUS SONY MITSUBISHI CHEMICAL KTC EPSON

**SLCS**

**கணனி சேவைகள்**

125A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பேசி: 021 4590686

தகவல் தொழில்நுட்பத் தேவைகளுக்கும்..

COMPAQ PLANET Genius PCS intel hp invent CISCO SYSTEMS

- Computers/Laptop - Intel / AMD / Celeron
- Branded Servers
- Computer Accessories
- Network Accessories and Tools,
- Scanners - HP/ Genius / Acer / Mercury,
- Printers - HP/ Epson/Canon/Dotmatrix
- UPS
- Stabillizer, etc.

WEDGE

T.V.

VCD, DVD Player

Home Theater Systems

ACCESS SOLAR

Solar Lights System

Hot Water System



# சமாதானமும், சுபீட்சமும் என்றும் நிலைத்திட அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

PEOPLE'S BANK

# மக்கள் வங்கி

கன்னாதிட்டி வீதி,

யாழ்ப்பாணம்.

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2004

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

எம் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் இதயம் கனிந்த சித்திரைப்
புத்தாண்டு வாழ்த்துக்கள்



**GEETHA JEWELL HOUSE**

மென்மைக்கு மெருகூட்டும் இளமைக்கு எழிலூட்டும் அசல்
௨௨ கரட் தங்க நகைகளை எழில்மிகு வடிவில்
செய்து பெற்றிட வாரீர்!

**கீதா ஆபரண மாளிகை**

இல: 12, நவீன சந்தை,
கண்டி வீதி, சாவகச்சேரி.
தொ.பே 0777737336
உரிமையாளர்: கந்தசாமி ஜீவகாந்தன்
(C-60)

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

எம் வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும்
சாந்தி, சமாதானம், சுபீட்சம்
நிறைந்த புதுவருட வாழ்த்துக்கள்



**அசல் 22 கரட் தங்க
நகைகளை எழில்மிகு
வடிவில் செய்து பெற்றிட
நாடவேண்டிய இடம்**

## நியூ கார்த்திகா நகைமாடம்

## சிறி கார்த்திகா நகைத் தொழிலகம்

நியூ கார்த்திகா நகைமாடம்,
இல: 06 மகாராஜா கட்டடம்,
சுன்னாகம் சந்தி,
சுன்னாகம்.
T.P: 0777290816

சிறி கார்த்திகா நகைத்தொழிலகம்,
இல: 212, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 0777148047

(C-63)

---

அன்பர்கள், வாடிக்கையாளர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள்



**அசல் 22 கரட் தங்க நகைகளை
கைதேர்ந்த தொழில்நுட்ப
வல்லுனர்களால் மனதைக் கவர்ந்த
டிசைன்களில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்**

நாற்பது வருட அனுபவம் உள்ளவர்கள்

**பிரணவா நகைத் தொழிலகம்**

68/A, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்

---

அனைவருக்கும் எமது புதுவருட
வாழ்த்துக்கள்

## துர்க்கா

## நகைப் பூங்கா

## Thurkka Jewellery Palace

இல: 71, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021-222-2228

---

**வலி-கிழக்கு வட பகுதி
பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
அச்சுவேலி**

எமது சங்கம் வாடிக்கையாளர்கட்கும்,
அங்கத்தவருக்கும் ஆற்றிவரும் சேவைகள்

❄நுகர்ச்சிப் பொருட்கள் விற்பனை
❄ஒப்பந்த சேவைகள்
❄உலர் உணவுப் பொருட்கள் விநியோகம்
❄கல்விச் சேவைகள்
❄புடைவை வகைகள்
❄வங்கிச் சேவைகள்
❄உரம், கிருமிநாசினி விநியோகம்
❄வாடகைக் கதிரைகள் சேவைகள்
❄கோழித்தீன் வகை விநியோகம்
❄மகளிர் மனைப்பொருளியல் சேவைகள்
❄எரிபொருள் விநியோகம்
❄மருந்தக சேவைகள்
❄கட்டிடப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள் விநியோகம்
❄தொலைத் தொடர்பு சேவைகள்

மேற்படி தரமான பொருட்களை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் நியாய விலையில் எமது
நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P :உள்நாடு : 070-21-2382, 021-222-5988
வெளிநாடு : 0094-70-21-2382

வலி கிழக்கு (வ.ப) ப.நோ.கூ. சங்கம்,
அச்சுவேலி

(C-54)

---

அன்பு நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

**உங்கள் வனப்பு எங்கள் கைகளில்!**



* நவநாகரிக பிறேம்களிலான மூக்குக் கண்ணாடி!
* முக அமைப்புக்கேற்ப கட்டுப்பல் வரிசை!
* மிதப்புப் பற்களுக்கு கிளிப் பொருத்துதல்!
* இலவச கண்பரிசோதனை!


இத்தனைக்கும் சிறப்புத் தேர்ச்சிபெற்ற தொழில்நுட்ப மகத்துவம்
பெற்ற ஒரே ஸ்தாபனம்:

**மூக்குக் கண்ணாடி அகமும், பல் கட்டுமிடமும்**

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். : 2486 கிளை: கொக்குவில் சந்தி, கிளை: சுன்னாகம்.

# புத்தாண்டுச் சிறப்புமலர் - 2004


தமது அன்பர்கள் நண்பர்கள்
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
சாந்தியும் சமாதானமும் நிறைந்த புத்தாண்டு
வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்




ABINAYA MULTI ELECTRONICS

Computer Sales and Service, Computer Accessories Sales, Software Developement, Photo Editing, Scanning, DVD writing, VHS to DVD Transfer, CD Copying, VHS to CD Transfor & T.V, VHS, CD Players, Radio, Blank CD's & other Items for Sales

அபிநயா மல்ரி எலக்ரோனிக்ஸ்

இல: 169, யாழ் வீதி, மானிப்பாய்.
E.mail : abinaya 2003a@yahoo.com
(C61)

தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறார்கள்



வீடியோ படப்பிடிப்பில் பல வருடகால
அனுபவம்மிக்க



புலவர் வீடியோ

நவீன டிஜிற்றல் கமராக்கள், டிஜிற்றல் கொம்பியூட்டர்கள் மூலம்
எடிட்டிங் செய்து உங்கள் விருப்பத்திற்கேற்ப சகல மங்கல
வைபவங்களைத் திறம்பட வீடியோ படம் பிடித்துத் தருபவர்கள்

அன்றும்
இன்றும்
என்றென்றும் உங்களின்

புலவர் வீடியோ

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (C59)
T.P : 0602212973
0776002626

அனைவருக்கும்
சித்திரைப் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்





மங்கை சில்க்ஸ்


அனைத்து வயதினருக்கும் ஏற்ற
ஆடைத்தினுசுகளை உங்கள் எண்ணம் போல
தெரிவு செய்ய நாடவேண்டிய இடம்
சுன்னாகத்தில்

MANGAI SILKS

(மங்கையர் மயங்கும் ஜவுளிகளின் எழில் மிகு காட்சியகம்)
இல:08 நவீன சந்தை, சுன்னாகம்.
(C62)

அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்





சகல விதமான பலசரக்குப் பொருட்களையும் நியாயமான
விலையில் பெற்றுக்கொள்ள.....

றூபா பன்முக வர்த்தகம்

இல : 104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 2479



அன்பர்கள்
நண்பர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது
புதுவருட வாழ்த்துக்கள்

BIRUNTHAA JEWELLERS

நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக
தங்க நகைகளுக்கு

பிருந்தா ஜீவல்லர்ஸ்

297 (301), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2004


புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

**சரஸ்வதி அரிசி ஆலை**

சிறந்த முறையில் அரிசி தீட்டியும், நெல் குற்றியும், அரிசி, மிளகாய், ஈர உழுந்து மற்றும் ஈர அரிசி ஆகியன அரைத்தும கொடுக்கப்படும்.

No.1 நாடு, தீட்டல், உடையல் என்பனவும் இங்கே கிடைக்கும்

**சரஸ்வதி தொலைத் தொடர்பகம்**

சிறந்த உள்ளூர், வெளியூர் தொலைத்தொடர்பு சேவை

ஆடியபாதம் வீதி. (பழைய ஸ்ரேசன் றோட்)

கொக்குவில் கிழக்கு,கொக்குவில். தொ.பே. 222 3105

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் உளங்கனிந்த சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!



**நந்தா புடவையகம் & பான்ஸி ஹவுஸ்**

ஆண், பெண்,சிறுவர்களுக்கான றெடிமேட் ஆடைகள் சேட், ரீ.சேர்ட் வகைகள், சல்வார் கமிஸ், சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள், ஸ்கேட் அன் பிளவுஸ் இன்னும் பல புடைவைத் தினுசுகள், அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



**NANTHA TEXTILE & FANCY HOUSE**

யாழ். வீதி (இலங்கை வங்கி முன்பாக) மானிப்பாய்.

பனைவளம் பெருக்கி மனைவளம் சிறந்து மகிழ்வுடன் வாழ்வீர்



**வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)**

மானிப்பாய் T.P. 021 222 3465

எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்!

நவநாகரிக நவீனமய ஆடைகள், புத்தம்புதிய சாறி வகைகள், நங்கையருக்கேற்ற ஜவுளிகள் அனைத்துக்கும் அதி சிறந்த உன்னதமான இடம்:




**மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்**

10, POWER HOUSE ROAD GRAND BAZAAR, JAFFNA. (மலாயன் கபே முன்பாக) T.P. 0777 311486



**MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR**



எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

நவநாகரிக நங்கையர் விரும்பும் நவீனரக ஆடைகளுக்கும் புத்தம் புதிய டிசைன்களிலான பட்டுப் புடைவைகளுக்கும் நாடவேண்டிய சிறந்த இடம்:

**லிட்டில் இந்தியன் பெஷன்**

77, கிராண்ட் பஜார், யாழ்ப்பாணம்.

T.P. 021 222 6440

NO. 9688

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2004


## TASTY FAST FOOD

### ரேஸ்ரி ஃபாஸ்ட் ஃபுட் ஸ்தாபனத்தார்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

தரமான உணவு நியாயமான விலை அன்பான உபசரிப்பு

விசேட வைபவங்களுக்குத் தேவையான உணவு வகைகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



TASTY FAST FOOD
Hospital Road,
First Cross Street Junction,
Jaffna.

ஆஸ்பத்திரி வீதி,
முதலாம் குறுக்குத்தெரு சந்தி,
யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

தங்க நகைகளின் அரங்கம்



## சிறிமாரி நகை மாடம்

49 (187) கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்



மேசைத் தொலைபேசி இணைப்புக்களை உடனுக்குடன் பொருத்தித் தருவதிலும் சகல வகையான கையடக்கத் தொலைபேசி வகைகளையும் பழுதுபார்த்துத் தருவதிலும் யாழ். நகரில் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்கள்

பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி நிறுவனத்தினர்

அத்துடன் மற்றுமொரு சேவை வாகனங்களில் பொருத்தக் கூடிய தொலைபேசிகளும் கவர்ச்சிகரமான விலைகளில் வழங்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு

## பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P - 021 - 222 7070 0712 - 399220
0777 - 242416 0712 - 384624

அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எம் இதயம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

ICI தயாரிப்பான CIC PAINT கம்பனியின்




DUCO - Autocolour
DULUX } Gloss finish once / Pentalite plus
Glidden } Emulsion / Enamal
Necol Autocolour

மற்றும் இதர பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்

70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P - 021 - 222 2763

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

தரமான மரத் தளபாடங்களை உங்களுக்கு சிறந்த முறையில் செய்து தருபவர்கள்



## ஈஸ்வரி மரக்காலை அன் தொழிலகம்

பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி.

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2004

## இங்கிலாந்தில் 15 வருடம் அனுபவம் பெற்ற


# TILKO HOLIDAYS (PVT) LTD




தனது சேவைகளை இலங்கையிலும் விஸ்தரித்துள்ளது.

கொழும்பிலும், திருமலையிலும், யாழ். மண்ணில் மூன்று கிளைகளுடனும் இயங்கிவருகின்றது.

## யாழ் நகர மையப் பகுதியில்




- **YALL CITY VILLA GUEST HOUSE**
  42/7, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
  (HNB பின்பக்கம் யாழ்ப்பாணம்.)
- **BOGAIN VILLA GUEST HOUSE**
  305, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
- **PALM VILLA GUEST HOUSE**
  114, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.




## எம்மிடம்

- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட விசாலமான அறைகள்
- Hot, Cool Water குளியலறைகள்.
- சிறுவர்கள் மகிழ்ச்சியுற Swiming Pool வசதி.
- கீழைத்தேச, மேலைத்தேச சுவைமிக்க உணவுகள், கடல் உணவுகளும் உடனுக்குடன் தயாரித்து பரிமாறப்படும்.
- தங்கியிருப்போர் மனதைக் கவரும் வகையில் அமைந்துள்ள புற்தரைகள், பூந்தோட்டம், வட்டக்குடில்களும்.
- சுற்றுலா பயணங்களுக்கான வாகன வசதிகளும்.
- இவற்றுடன் பயிற்றப்பட்ட எமது பணியாளர்களின் கனிவான பராமரிப்பும், இன்முகத்துடன் கூடிய சேவைகளும்.



## இவற்றைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!



**JAFFNA**
TILKO HOLIDAYS (PVT) LTD
Hotel and guest Houses
305, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 021 - 222 5969
Fax - 021 - 222 5969
Email - tilko holidays @ yahoo. com

**Colombo**
No - 65, Sangamita Avenue,
Mt. Lavinia.

**London Head Office**
213, High Street north, Eastham London E6 IIG
Tel : (++ 44) 02084720029.
Mobile : (++ 44) (0) 7957400777

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2004

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
❄ புத்தம் புதிய துவிச்சக்கர வண்டிகள் ❄ T.V. டெக் வகைகள் ❄ அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் ❄ ரேடியோ வகைகள் ❄ அன்ரனா வகைகள்
போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் யாழ். நகரில் பெற்றுக்கொள்ள

இ. ச. பேரம்பலம் சகா நிறுவனம்

E.S. PERAMPALAM AND CO

(PEPSI, MIRINDA, 7UP போன்றவற்றிற்கான ஏகவிநியோகஸ்தர்கள்)

50, 52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 2988, 021 222 3096 Fax: 021 222 2368

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
☼ கட்டடப் பொருட்கள் ☼ பெயின்ற் வகைகள்
போன்றவற்றை நிதான விலையில் ஓரிடமாகப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

கஜமுகன் ஹாட்வெயார்ஸ்

CALTEX 2T ஒயிலுக்கான வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்

கஜமுகன் ஹாட்வெயர்ஸ் 147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 2833

மங்களமும் சுபீட்சமும் மலர்ந்து
வாழ்வில் வசந்தம் வீச சித்திரைப்
புத்தாண்டுத் திருநாள்
வழிவகுக்கட்டும் என
உவகையுடன் வாழ்த்துகின்றோம்!



கொமர்ஷல் வங்கி
"உங்கள் நலமே எங்கள் நோக்கம்"

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2004





✻ இலங்கை வங்கியின் புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல்கள் யாவும் 14.4.2004 புதன்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும்.

✻ அன்றைய தினம் கொடுக்கல் வாங்கல் செய்யும் வாடிக்கையாளருக்கு ரூபா 10/= நாணயக் குற்றி ஒன்று கைவிசேடமாக வழங்கப்படும்.

✻ அத்துடன் ரூபா 2500/=க்கு மேல் வைப்புச் செய்பவர்களுக்கு அதிஷ்ட லாபச்சீட்டின் மூலம் சேமிப்புச் சான்றிதழ்கள் விசேட பரிசாக வழங்கப்படும்.

✻ மழலைகளுக்கு பிறந்ததினப் பரிசாக வழங்கக்கூடிய பொன் அரும்புப் பரிசுதியப் பத்திரங்கள் (RANKEKULU GIFT VOUCHERS) அன்றைய தினம் முதல் எம்மிடம் கொள்வனவு செய்யலாம்.

ரூ.200/- ரூ.500/- ரூ.1000/-
ஆகிய பெறுமதியுடைய
பத்திரங்களாக இவற்றைக்
கொள்வனவு செய்ய முடியும்.

**அன்பர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இலங்கை வங்கி தனது
புத்தாண்டு
வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கின்றது.**

# இலங்கை வங்கி

## உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

(C/58)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2004

## அனைவருக்கும் எம் இதயம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

யாழ்.நகரில் சகலவிதமான கையடக்கத் தொலைபேசி வகைகளை பெற்றுக்கொள்ளவும் சகல தொலைபேசிகளுக்கான உதிரிப்பாகங்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும்

உங்கள் ஒரே தெரிவு



**நவீன் செலுலர் போன்சொப்**

191/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

PHONE: 0777 265711

---

அனைவருக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

**RAINBOW LINKS**

208, First cross street, Hospital Road Junction, Jaffna.

- வீடியோ கசற் மற்றும் சி.டி வாடகைக்குப் பெறவும்
- ஓடியோ வீடியோ ஒலி ஒளிப் பதிவுகள் மேற்கொள்ளவும்
- வீடியோ நாடாக்களில் பதிவு செய்யப்பட்ட உங்கள் திருமண விழாக்கள் மற்றும் மங்களகரமான வைபவங்களை சி.டிகளில் பதிவு செய்துகொள்ளவும்
- ஒலிப்பதிவு செய்யப்பட்ட, ஒலிப்பதிவு செய்யப்படாத சி.டிகள் மற்றும் கசற் என்பவற்றை நியாயமான விலையில பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள்.

**றெயின்போ லிங்ஸ்**

208, முதலாம் குறுக்குத்தெரு
ஆஸ்பத்திரி வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 3170

---

## அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

வர்த்தக மேம்பாடுகளுடன்
கலை கலாசார
செயல்களிலும் பாடுபடும் சங்கம்

**கட்டைவேலி நெல்லியடி பல.நோ.கூ.சங்கம்**
**கட்டைவேலி நெல்லியடி**

T.P: 026 3263

---

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**பிரம்யா நகை மடம்**



நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக தங்க ஆபரணங்களை உங்கள் எண்ணம் போல் தெரிவுசெய்திட நாடுங்கள்

**PRAMYA NAHAI MADAM**

யாழ்வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

---

எமது நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்

**WESTEN UNION** பணப் பரிமாற்றம்

❖ விரைவானது ❖ பாதுகாப்பானது ❖ நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிகத் துரிதமாக பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு

- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை.
- வங்கிக்கணக்கு அவசியமில்லை.
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்.

**THIRUMURUGAN COM NET**

T.P: 021 - 222 7310
021 - 222 7555
021 - 222 7560
Fax: 021 - 222 7310
E.Mail: thirumurugan @ cudoramail.com

46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச.முன்பாக)
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சாந்தி சமாதானம் நிறைந்த புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் அகமகிழ்கிறார்கள்



**திருமகள் ஜுவல் கிறாப்ற்**

உன்னத கலைநயம் மிக்க அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்திட சிறந்த ஸ்தாபனம்

**THIRUMAGALL JEWEL GRAAFT**

இல.11A, இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

T.P: 0776026682

---

எங்கும் மங்களம் பொங்க அனைவர்க்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# ராம்கோ சீமெந்து
# RAMCO CEMENT

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

SLS - 107 அங்கீகாரம் பெற்றதும்
ISO - 9002 தரம் பெற்றதும்
BSS - 12-1991 தரத்திற்கு அமைவாக

தயாரிக்கப்பட்ட ஆசியாவின் முதல் தர (நம்பர் -1) சிமெந்து ராம்கோ.

ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர்கள்

# எஸ்வரபகவான் & கொம்பனி

91, ஸ்ரான்லி வீதி, T.P: 021 222 2350 யாழ்ப்பாணம்.

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2004


எம் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் சாந்தியும், சமாதானமும்
நிறைந்த புதுவருட வாழ்த்துக்கள்

அனைத்து வயதினருக்கும் ஏற்ற
ஆடைத்தினுசுகளை உங்கள்
எண்ணம்போல தெரிவு செய்திட
மற்றும் அழகு சாதனப் பொருள்
விற்பனையாளர்

**கணேசன் சென்ரர்**

கே.கே.எஸ். வீதி,
T.P. 222 5708
இணுவில்
(ஆஸ்பத்திரி முன்பாக)

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

**மொடேன் மில்க்வைற் பவர் சோப்**

எனக் கேட்டு வாங்குங்கள்
மில்க்வைற் இன்டர்ஸ்ரீஸ், யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

**நியூ றெஸ்ற் ஹவுஸ்**

உணவு தங்குமிடம் விருந்துபசரணை
வாருங்கள் வந்து மகிழ்வுறுங்கள் எங்கும் வாழ் மக்களுக்கு!

இயற்கை அமைவிலே! இனிய அகத்திலே! வந்தோரை வரவேற்று விருந்தோம்பிச் சிறப்பிக்க; நாற்பது வருடங்களுக்கு மேல் இலங்கையின் உல்லாசப் பயணத்துறையிலே கீழைத்தேய, மேலைத்தேய, சீன உணவு வகைகளில் இணையற்ற சாதனை படைத்தவர்கள், அரசினர் முதல், மதபீடங்கள், பொதுமக்கள் யாவர்க்கும் உயர்ந்த உன்னத் சேவை வழங்கியவர்கள், யாழ். வாடிவீடு, காங்கேசன்துறை வாடிவீடு, விருந்தினர் விடுதி, பருத்தித்துறை வாடிவீடு ஆகியவற்றின் நிர்வாக முன்னோடிகள் பத்தி என்று செல்லமாக அழைக்கப்படும் யாழ். வாடிவீட்டு (Rest House) அதிபர் T.பத்திநாதன் அவர்களின் வாரிசுகள் வரவேற்கிறார்கள். மங்களகரமான திறப்புவிழா
வாருங்கள் வந்து மகிழ்வுறுங்கள்

இல.19, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி யாழ்ப்பாணம். T.P. 021 222 5928 (மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முன்பாக)

அனைவருக்கும் சாந்தி, சமாதானம், சுபீட்சம் நிறைந்த சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**போட்டோ ரவி அன் வீடியோ**

நவீன டிஜிட்டல் வீடியோ கமரா மூலம் சிறந்த மிக்சிங் முறையில் வீடியோ படப்படிப்புக்கும், ஸ்ரில் கலர் படப் பிடிப்புக்கும் ஸ்ரில் கலர்ப் படங்களை டிஜிட்டல் வடிவமைப்பில் அல்பம் கட்டிப் பெற்றுக்கொள்ளவும் உங்கள் வீடியோ கசற்களை CDயில் பதிவு செய்யவும் நாடவேண்டிய இடம்.

**PHOTO RAVI AND VIDEO**

139, கன்னாதிட்டி வீதி,
(சயன்ஸ் ஹோல் முன்பாக)
யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0777 110015
021 222 6921

அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும்
எங்கள் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

- T.V. வகைகள்
- ரேடியோ வகைகள்
- டெக் வகைகள்
- கணனிகள்
- அன்ரனா வகைகள்
- கணனி உதிரிப்பாகங்கள் அனைத்திற்கும்

**வி.கே.இராசரத்தினம்**

95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2056

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்களா? அவற்றிற்கான உதிரிப்பாகங்களா? மோட்டார் வாகனங்களா?
பற்றறி வகைகளா? அனைத்தையும் ஓரிடத்தில் நிதான விலையில் பெற்றிட

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**
108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
மெயின் வீதி, சங்கானை.

**அருள் விநாயகர் றேடர்ஸ்**
106, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்எமது புதுவருட வாழ்த்துக்கள்

**தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

T.P. 021 222 3053, 021 222 3054

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2004


ஆடைகளின் சாம்ராஜ்சியம்

**MAMMY DADDY TOP MY STYLE**

K.K.S. Road, Kokuvil Junction, Kokuvil

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

★ சேட்டிங் ★சூட்டிங்
★சேட் வகைகள்
★சல்வார்கிற்
★சோளிகிற்
★ஸ்கேட்
★பஞ்சாபி



சிறுவர், சிறுமியர், ஆண்கள், பெண்களுக்கு ஏற்ற ரெடிமேற் ஆடைகள் முதலான அனைத்து ஆடைகளையும் நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஆடைகளின் சாம்ராஜ்சியமான ஒரே இடம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

**கஜேந்தினி வெற்றிலைக்கடை**

கொக்குவில் சந்தி, புதுக்கோயில் முன்பாக

வாசு வெற்றிலை, சதா பீடா, வாயில் வெற்றிலை புகையிலை, வேல் மிக்சர், கூல்சோடா குழந்தைப் பிள்ளைகளுக்கான மாவகை, அனைத்து வகையான வாழைப்பழங்கள், இனிப்புப் பண்டங்கள், பிஸ்கட் வகைகள் என அனைத்து வகையான பல்பொருட்களையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

கஜேந்தினி வெற்றிலைக்கடை

**அன்பர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!**

★ காலத்தால் அழியாத ★ கற்பனைக்கும் எட்டாத ★ எழில் குன்றா அற்புதப் படைப்புகள்
★ பார்ப்பவர் கண்களில் பளிச்சிடும் அசல் ரகங்கள், குறிப்பிட்ட தவணையில் தரமாகவும் நியாயமாகவும் பெற்றிட நாடுங்கள்:

**சாரங்கன் நகை மாடம்**
அன்ட் சென்ரர்
இல. 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 6059

**சாரங்கா நகை மாடம்**
157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 2480, 6972
இல. 177A இல் இயங்கிவந்த சாரங்கா நகைமாடம் தற்பொழுது இல. 157/1 இல் இயங்கி வருகின்றது.

**அருள் முருகன் நகை மாடம்**
96/1கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.



புத்தாண்டு – நல்வாழ்த்துக்கள்

ரி.வி., டெக், வீடியோ ஓடியோ கசெட், கசெட் றேடியோ, சங்கீத ஒகன்கள் சகலவிதமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், பிலிம்றோல் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் ஆகியவற்றைத் தரமாகப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

# சிறி மாதவன்

இல. 97, கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம், தற்போது கஸ்தூரியார் வீதி, ஜும்மா பள்ளிவாசல் லேனில் இயங்கி வருகிறது என்பதனை வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அன்பர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



அசல் தங்க நகைகளுக்கு நம்பிக்கையாக நாடுமிடம்

**சிறிமீனாட்சி தங்கமாளிகை**

187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
T.P: 222 6109

எல்லோருக்கும் எம்மினிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**அபிராமி எலக்ரிக்கல்ஸ்**

CFC CLIPSAL சிக்கன ரியூப் பல்புகள் விநியோகிப்பதற்கு இலங்கை மின்சார சபையினால் அங்கீகரிக்கப்பட்டவர்கள்

**ABIRAMY ELECTRICALS**
**DEALERS IN ELECTRICAL GOODS**

கிலிப்சால் மின்சாரப் பொருட்களின் யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்:

**ABIRAMY ELECTRICALS**
62/34, STANLEY ROAD, JAFFNA.
T.P. 021 222 2889
(NEAR THE JAFFNA POST OFFICE)

**அனைவருக்கும் இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்**

நாளெல்லாம் புத்துணர்ச்சியுடன் இருக்க அருந்துங்கள்

**அண்ணா கோப்பி**

வளரும் குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறந்த போஷாக்குமிக்க உணவு

**ஜீவாகாரம்**

மேலும் உங்கள் சமையலை இலகுவாக்கி விரைவாக உணவு தயாரிக்க அண்ணாவின் தயாரிப்புகள்

- தோசை மா
- உழுந்துமா
- வறுத்த உழுந்து மா
- சிவப்பு அரிசி மா
- வெள்ளை அரிசி மா
- ஆட்டா மா
- குரக்கன் மா
- கடலை மா
- கறி மிளகாய்த்தூள்
- தனி மிளகாயத்தூள்
- சரக்குத்தூள்
- துண்டுமிளகாய்
- மஞ்சள் தூள்
- மிளகுத்தூள்
- சீரகத்தூள்

உங்கள் பற்களின் வெண்மைக்கும், உறுதிக்கும் பற்களை பளபளக்க வைக்கும் அண்ணா பற்பொடி

அகத்தின் அழகு முகத்திலல்ல; உங்கள் கன்னத்தில் பார்க்க இன்றே வாங்குங்கள் புளூம் ரெல்கம் பவுடர்

உங்கள் ஆலயங்களிலும் இல்லங்களிலும் நறுமணம் கமழ அண்ணாவின் ஊதுபத்திகள்

★ ரோஸ்பத்தி ★ மதுரங்கா பத்தி ★ சுகந்தமல்லி பத்தி ★ துர்க்கா பத்தி

இவை அனைத்தையும் சுலபமாக இன்றே பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Manufactured & Marketed by **ANNA INDUSTRY - INUVIL**
T.P. 021 222 3565

# சீனப் பணயக் கைதிகள் எங்கே?
# ஈராக்கில் தொடரும் பணயம்
## ஏனையோர் பற்றித் தகவலில்லை

(பக்தாத்)
.'.பலூஜா நகரில் கடத்தப்பட்ட தனது 7பிரஜைகளும் எங்கே என்று சீனா கேள்வி எழுப்பியிருக்கிறது .

ஈராக்கிலுள்ள சீனத் தூதரகமும இவ் விவகாரம் தொடர்பில் தீவிரமான முயற்சிகளை மேற் கொண்டுள்ளது.

இதேவேளை, அல்- அரேபி



யத தொலைக்காட்சி நிறுவனம் கடத்தப்பட்டவர்கள் தொடர்பான ஒளிநாடா ஒன்றைப் பெற்றிருப்பதாகவும், 18- 49 வயதுவரையிலான தென்சீன பிஜி மாகாணத்தவர்களான பணயக் கைதிகள் எதற்காக ஈராக் போனார்கள் என்பது கேள்விக்குரியது என்று தெரிவித்துள்ளது.

ஆனால் ஜோர்தானிலிருந்து ஈராக்கிற்குச் செல்லும் வழமையான பாதை மூடப்பட்டுள்ளதால் இவர்கள் குறுக்குவழியால் ஈராக் செல்ல முற்பட்டிருக்கலாம் என்றும் அவ்வாரான முயற்சியின் போதே இவர்கள கடத்தல்காரர்களிடம் அகப்பட்டிருக்க வேண்டும் என்றும் சீன அரசு அறிவித்திருக்கிறது.


ஜோர்தானிலிருந்து ஈராக்குக்கு செல்லும் வழியில் ஆயுதம் தாங்கியவர்களால் கடத்திச் செல்லப்பட்ட தனது நாட்டுப் பிரஜைகளை விடுவிக்க ஈராக் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சீன வெளியுறவு அமைச்சு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

சீனக் கம்யூனிசக் கட்சியின் தலைவர் இது பற்றித் தெரிவிக்கையில், ஈராக்கின் இடைக்கால நிர்வாகம் இது தொடர்பில் முயற்சிகளை மேற்கொண்டு கடத்தல் காரர்களுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டுமென்றும் தனது நாட்டுப் பிரஜைகள் பாதுகாப்பாக மீட்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஏற்கனவே பணயமாகப்பிடிக்கப்பட்ட 7 தென்கொரியர்கள், ஒரு பிரித்தானியர், ஒரு அமெ ரிக்கர், 2இஸ்ரேலிய அரபுக்கள் மற்றும் 3ஜப்பானியரில் பிரித்தானியரான கரி ரீலி கடந்த ஞாயிறு விடுவிக்கப்பட்டார். 7 தென்கொரியர்களும் பிடிக்கப்பட்ட அன்றே விடுவிக்கப்பட்டனர். அமெரிக்கப் பத்திரிகையாளரான தோமஸ்ஹமில் என்பவர் குரூரமாகக் கொலைசெய்யப்படுவார். என்று ஒளிநாடா மூலம் கடத்தல்காரர்கள் செய்தி வெளியிட்டுள்ளனர் .

தவிரவும் மூன்று ஜப்பானியர் மற்றும் அரபியர்கள் பற்றி எதுவித தகவல்களும் இல்லை. ஆனால பிந்திக் கிடைத்த தகவல்களின் படி ஜப்பானியர் விடுவிக்கப்படுவர் என்று ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. (யே)

## தூதரகத்திற்குப் பாதுகாப்பு



ஈராக்கில் வெளிநாட்டவர்கள் தொடர்ச்சியாகப் பணயக் கைதிகளாகப் பிடிபடும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதனை அடுத்து வெளிநாடுகளின் தூதரகங்கள் தமது பிரஜைகளதும் தூதரகங்களினதும் பாதுகாப்பைப் பலப்படுத்தத்தொடங்கியுள்ளன.

ஏழு சீனப் பிரஜைகள் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டதைத்தொடர்ந்து ஈராக்கில் உள்ள சீனத்தூதரகம் ஆயுதம் தாங்கிய பொலிஸாரினால் தீவிர பாதுகாப்புக் குட்படுத்தப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# அமெரிக்காவை வெளியேற்றுங்கள்
# ஹெக்மட் டையார் அறைகூவல்

(பெஷாவர்)
ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகளை வெளியேற்றும் தாக்குதல்களை அதிகரிக்குமாறு கெரில்லாத் தலைவர் ஹெக்மட்டையார் அறைகூவல் விடுத்துள்ளார்.

ஒருகாலத்தில் அமெரிக்காவின் நெருங்கிய நண்பனாகவும், சோவியத் ஆக்கிரமிப்புப் படைகளுக்குச் சிம்ம சொப்பனமாகவும் விளங்கிய முஜாஹிடீன் தலைவரான ஹெக்மட்டையார் தலிபான்கள் ஆப்கானைக் கைப்பற்றுமுன் அந் நாட்டைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.



அமெரிக்க அரசால் முண்டு கொடுக்கப்பட்டுள்ள தற்போதைய ஹமீட் கராஸாயின் அரசுககெதிராக அவர் தலிபான்களுடன்இணைந்துள்ளார். ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக் கெதிராக ஈராக்கியர் திரண்டெழுந்துள்ளதைப் போல ஆப்கானிலும் மக்கள் கிளர்ந்தெழ வேண்டுமென்று அவர் கேட்டுள்ளார்.

ஈராக்கியர்களுக்கு முன்பாக ஆப்கானியரே இப்போரைத் தொடங்குவர் என்று தாம் எதிர்பார்த்ததாகவும் தெரிவித்துள்ள அவர், ஏ.பி. செய்தி நிறுவனத்திற்கு இச்செய்தியை அனுப்பிவைத்துள்ளார். (யே)

# வியட்நாமில் கலவரம்
# வெளிநாட்டவருக்குத் தடை

(ஹனோய்)
கம்யூனிஸ்ட் நாடான வியட்நாமின் டக்லக் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கலவரங்கள் காரணமாக வெளிநாட்டவர் அப்பகுதிகளுக்கு பயணம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

டக்லக் மாகாணத்தின் மலைப் பிரதேசங்களான புவொன் மாநகரும் ஹனோயி நகரமும் ஆர்ப்பாட்டங்களால் அதிர்ந்தன.

கடந்த சனிக்கிழமை இராணுவ அணிவகுப்பைப் போன்றதொரு பாரிய ஆர்ப்பாடட அணிவகுப்பைப் பொதுமக்கள் நடத்தியதாகவும் பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டு ஆர்ப்பாட்டக்காரரைக் கலைத்ததாகவும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

2001ம் ஆண்டில் வியட்நாமில் புதிதாக உருவாக்கப்பட்ட சொத்துரிமைச் சட்டம் தொடர்பாக இப்பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் தொடர்ச்சியாகவே இது இடம்பெற்றுள்ளது.

இப்பிரதேசங்களுக்கு வெளிநாட்டவர்களோ பத்திரிகையாளர்களோ விஷேட அனுமதியின்றிச் செல்ல முடியாது என்பது அந்நாட்டு அரசின் அறிவித்தலாகும்.

(யே)

# ஈராக்கிலிருந்து அவுஸ்திரேலிய படைகள் வாபஸ் ஆகாது!
## பிரதமர் ஜோன் ஹொவாட்

(சிட்னி)
ஈராக்கிலிருந்து அவுஸ்ரேலியப படைகள் வாபஸ் பெறப்படமாட்டாது என்று அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹொவாட் திட்ட வட்டமாக அறிவித்தார்.ஈராக்கில்வெளிநாட்டவர்களை ஆயுதக் குழுக்கள கடத்தும் சம்பவங்கள் அதிகரித்துவரும் பின்னணியில் பிரதமரின் இந்தச் செய்தி வெளியாகியிருப்பது புஷ் நிர்வாகத்திற்கு மிகுந்த தெம்பை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.



சில நாட்களுக்கு முன் ஜப்பானிய, தென்கொரிய மற்றும் சீனப் பிரஜைகள் ஈராக்கிய ஆயுதக் குழுக்களால் கடத்தப்பட்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஈராக்கில் இருந்து படைகளை வாபஸ் பெறுவது என்பது ஈராக்கிற்கும் உலக பாதுகாப்புக்கும் நல்லதல்லவென்றும் அவுஸ்திரேலியப் பிரதமர் தெரிவித்தார்.ஈராக்கில் சுமார் 850 அவுஸ்திரேலிய இராணுவ வீரர்கள் புதிய ஈராக்கிய இராணுவத்திற்குப் பயிற்சி அளிப்பது

உலக தரிசனம்

# ஹொங்கொங்கில் ஆர்ப்பாட்டம்
# 20,000 பேர் கலந்துகொண்டனர்

(ஹொங்கொங்)
சுமார் 20,000பேர் கலந்து கொண்ட மாபெரும் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன் தினம் ஹொங்கொங்கில் நடைபெற்றது.

ஹொங்கொங்கில் செய்யப்படும் எந்த அரசியல் மாற்றங்களும் சீனாவால் அங்கீகரிக்கப்படவேண்டும் எனும் சீனக் காங்கிரஸின் தீர்மானத்தை எதிர்த்துப் பல்லாயிரக்கணக்கானோர் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்பபாட்டக்காரர்களைப பொலிஸார் ஒருகட்டத்தில் தடுத்து நிறுத்திய பொழுதும் பொலிஸாரை கடந்து கொண்டு சீன அரசப் பிரதிநிதியின் அலுவலகத்திற்குள் அவர்கள் புகுந்தனர்.

ஏராளமான கடிதங்களையும் புகார் மனுக்களையும் அலுவலக செய்திப் பெட்டியில் நிறைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் ஹொங்கொங்கில் ஜனநாயகம் படிப்படியாக நடைமுறைக்கு வருவதைச் சீன அரசாங்கம் உறுதிப் படுத்த வேண்டும் என்று கோஷமிட்டனர்.

ஹொங்கொங்கின் தலைமை அதிகாரி டுங் சீ பதவி விலகி,

உரிமைகளுக்கு உத்தரவாதம் என்று ஹொங்கொங்கில் இருந்து



அளிக்கப் படவேண்டுமென்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்

# 2004 தெல்லிப்பழைப் பிரதேச விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வலிகாமம் வடக்கு தெல்லிப் பழை பிரதேச செயலர் பிரிவின் 2004 ஆம் ஆண்டு வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் அனைத்துப் போட்டி முடிவுகளின் படி மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக் கழகம் 48 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினை சுவீகரித்துக் கொண்டது.

இரண்டாம் இடத்தினை அளவெட்டி ஆர்.டி.எஸ்.விளையாட்டுக் கழகம் 34 புள்ளிகளைப் பெற்று தனதாக்கிக் கொண்டது. மூன்றாம் இடத்திற்காக 33 புள்ளிகளைப் பெற்றிருந்த இளஞ்சுடர் விளையாட்டுக் கழகம், கணேசன் விளையாட்டுக்கழகம் மற்றும் சென்லூட்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகிய மூன்றும் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

மெய்வல்லுநர் போட்டி முடிவுகளின் படி சிறந்த மைதான நிகழ்ச்சிகளுக்கான சிறந்த வீராங்கனையாகவும் சிறந்த சுவட்டு நிகழ்ச்சிகளுக்கான வீராங்கனையாகவும் மல்லாகம் ஆர்.டி.எஸ்.விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த மேரி றெயித்தா தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

மேலும் ஆண்களுக்கான சிறந்த மைதான நிகழ்ச்சிகளுக்கான வீரராக கணேசன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க.ஜெனார்த்தும் சிறந்த சுவட்டு நிகழ்ச்சிக்குரிய வீரராக அளவெட்டி ஆர்.டி.எஸ். விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுதர்சனும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதில் அளவெட்டி ஆர்.டி.எஸ். விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சுதர்சன் 2004 ஆம் ஆண்டுக்கான சிறந்த மெய்வல்லுநர் போட்டிகளுக்கான வீரராகத் தெரிவு செய்யப்பட்டார்.

(யே-121)

## உலக விளையாட்டு வலம்



பாகிஸ்தான் அணியின் விக்கெற் காப்பாளர் விக்கெற்றைக் கடந்து செல்லும் பந்தைத் தாவிப் பிடிப்பதைப் படத்தில் காண்கிறீர்கள். ராவல் பிண்டி மைதானத்தில் நடைபெற்ற பயிற்சியின் போது இக் காட்சி படமாக்கப்பட்டது.



புள்டோக் அணியின் ஹூக்பற்றன் எதிரணியான சீஈகிள் அணியின் வீரர் ஜைமூல்லேன் தலையைப் பிடித்து அழுத்திக் கீழே சாய்க்க முயல்கிறார். இவ் இரு அணிகளுக்கும் இடையிலான ரக்பி உதைபந் தாட்டப் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது. இப் போட்டியில் புள்டோக் அணியினர் வெற்றி பெற்றனர்.

## விளையாட்டுச் செய்திகள்

# இலங்கையின் நீச்சல் வீரர் பயிற்சிக்காக ஆஸி. பயணம்

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் சிறந்த நீச்சல் வீரர்களுக்கான முதல் 16 பேர் பட்டியலில் தானும் அடங்க வேண்டும் என்பதே தனது ஒரே குறிக்கோள் என இலங்கையின் நீச்சல் வீரரான கொண்டவ் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.நீச்சல் போட்டிகளில் யூலியன் போலினுக்கு பின்னர் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறந்த நீச்சல் வீரராக கொண்டவ் பிரான்சிஸ் விளங்குகின்றார்.

நடந்து முந்த 9 வது தெற்காசிய (சாப்) விளையாட்டு விழாவில் இரண்டு தங்கப் பதக்கங்கள் உட்பட 6 பதக்கங்களை கொண்டவ் பிரான்சிஸ் வெற்றி கொண்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதன் மூலம் ஒலிம்பிக் போட்டிகளில் இம் முறை பங்கு பற்றும் தகுதியையும் இவர் பெற்றுக்கொண்டார். 50 மீற்றர் மற்றும் 100 மீற்றர் பட்டபிளை முறையிலான நீச்சல் போட்டிகளில் தங்கப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்ட பிரான்சிஸ் மேலதிக பயிற்சிகளுக்காக அவுஸ்திரேலியாவுக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கு விஷேட பயிற்சிகளைப் பெறுவதன் மூலம் தனது நீச்சல் முறைமையில் மேலும் வேக அதிகரிப்பைத் தன்னால் ஏற்படுத்த முடியும் எனவும், அப் பயிற்சிகளை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பி இலங்கையின் ஒலிம்பிக் போட்டிக்கான குழாமில் இணைந்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளத்தான் திட்டமிட்டிருப்பதாகவும் கொண்டவ் பிரான்சிஸ் இதன் மூலம் ஒலிம்பிக் போட்டிகளில் சிறந்த நீச்சல் வீரர்களுக்கான முதல் 16 பேர் பட்டியலுக்குள் இடம் பிடிப்பதே தனது பிரதான நோக்கம் எனவும் பிரான்சிஸ் தெரிவித்தார். (ஜே-68,121)

## இறுதியாட்டம்

எழுபேர் கொண்ட யாழ்.மாவட்ட ஹொக்கி அணிகளுக்கிடையிலான இறுதியாட்டம் நாளை மாலை யாழ்.பல்கலைக்கழக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மாலை 4.00 மணிக்கு 3 வது இடத்திற்காக ஸ்போட்ஸ் சயன்ஸ் 'ஏ' அணியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி அணி விளையாடும். மாலை 5.00 மணிக்கு பல்கலைக் கழகக் கோல்ட் அணியும் கிருஸ் ஹொப்பர்ஸ் அணியும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. (யே)

## மென் பந்து கிரிக்கெற்

ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகம், கடந்த பல வருடங்களாக உயிர்ப்பு விழாவை முன்னிட்டு கொண்டாடி வரும் மணமானவர்களுக்கும், மணமாகாதவர்களுக்கும் இடையிலான 20 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெற் போட்டி, ஈச்சமோட்டை முதலைக்குள விளையாட்டு மைதானத்தில் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகத் தலைவர் கப்ரின் டீ.ஏ.எம். குணசிங்கத்தின் நெறிப்படுத்தலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இவ்வாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மணமானவர்கள் அணி 16 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

மணமாகாதவர் அணி அதன் துடுப்பாட்டத்தில் 18 ஓவர்களில் சகலவிக்கெற்றுக்களையும் இழந்து 62 ஓட்டங்கள் மட்டும் பெற்றதனால் தோல்வியுற்றது. (யே-110)

# முத்தையா முரளீதரனுக்கு பலரும் ஆதரவு தருகின்றனர்

இலங்கையின் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளரான முத்தையா முரளீதரன் சர்ச்சையில் உள்ள இந்த நேரத்தில் அவருக்கு ஆதரவாக பலர் குரல் கொடுக்கின்றமை தமக்கு மகிழ்ச்சியை அளிப்பதாக இலங்கை அணியின் தலைவர் மாவன் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அவுஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவர் ஸ்டீவ்வோ இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் அர்ச்சுன ரணதுங்க ஆகியோர் முரளிக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். 1996 ஆம் ஆண்டு முரளிதரனின் பந்து வீச்சு முறையற்றது என மைதானத்தில் வைத்து நடுவர் குறிப்பிட்ட போது தனது கிரிக்கெற் வாழ்க்கையை பணயம் வைத்து நடுவரிடம் கடுமையாக வாதாடினார் ரணதுங்க. அவர் தற்போதும் முரளிக்கு ஆதரவாக இருப்பது மகிழ்ச்சியான விடயம்.

இவர்கள் முரளீக்கு அதரவு தெரிவிப்பதனால் முரளீதரனுக்கு எதிரான சர்ச்சை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்று அத்தபத்துக் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கை அணி சிம்பாப்வே அணியுடன் கிரிக்கெற் போட்டிகளில் கலந்து கொள்ளும் முகமாக எதிர்வரும் 17 ஆம் திகதி சிம்பாப்வே பயணமாகின்றது. சிம்பாப்வே செல்லும் இலங்கையணி 2 டெஸ்ட் போட்டிகளிலும், 5 ஒரு நாள் சர்வதேசப் பொட்டிகளிலும் விளையாடவுள்ளது. இம் முறை டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணிகளுக்காக பல புதிய வீரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி புலவாயோவில் நடைபெற்றவுள்ளது. (யே-121,68)

# நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் பிறையன் லாரா புதிய சாதனை

மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இங்கிலாந்து அணிக்குமிடை



யில் சென்ஜோன்சில் நடைபெற்று வரும் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவரான பிறையன் லாரா மீண்டுமொரு சாதனையை நோக்கி முன்னேறியுள்ளார். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின் போது பிறையன் லாரா ஆட்டமிழக்காமல் 313 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

டெஸ்ட் கிரிக்கெற் வரலாற்றில் இவர் இரண்டாவது தடவையாக 300 ஓட்டங்களைப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதன்படி அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெற் வீரரான சேக்டொன் பிரெட்மனுக்கு அடுத்தபடியாக டெஸ்ட் கிரிக்கெற் போட்டிகளில் முச்சதங்களைக் குவித்த வீரர் என்ற பெருமையையும் பிறையன் லாரா தனதாக்கிக் கொண்டுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெற் போட்டி ஒன்றில் ஒரு வீரர் ஒரு இன்னிங்சில் பெற்ற அதிக ஓட்டங்கள் என்ற சாதனையை முறியடிப்பதற்கு பிறையன் லாராவிற்குத் தேவைப்படுவது இன்னும் 68 ஓட்டங்கள் மட்டுமே ஆகும்.

மேலும் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மத்தியூ ஹேய்டன் 2003 ஆம் ஆண்டு சிம்பாப்வே அணிக்கெதிராகப் பெற்ற 380 ஓட்டங்களே தற்போதைய உலக சாதனையாகப் பெற்ற சென்ஜோன்ஸ் விளையாட்டு அரங்கிலேயே தனது முதலாவது முச்சதமான 375 ஓட்டங்களைப் பெற்று முன்னர் உலக சாதனைக்கான வீரராகத் திகழ்ந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பிறையன் லாரா மீண்டும் ஒரு உலக சாதனையை ஏற்படுத்துவார் என்றே பெரும்பாலான கிரிக்கெற் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின் போது மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 விக்கெற் இழப்பிற்கு 595 ஓட்டங்களைப் பெற்று மிகப் பலமான நிலையில் இருந்தது. இதில் பிறையன் லாரா ஆட்டமிழக்காமல் 313 ஓட்டங்களையும் றிட்லீ ஜேக்கப்ஸ் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் பெற்றிருந்த அதேவேளை, ராம் நரேஷ் சர்வான் 90 ஓட்டங்களை




அதிகாரக் குத்துச் சண்டை வீரர் விளாடிமிர் கிளிற்சோ போட்டி யின் மூன்றாவது சுற்றின் போது எதிராளியான லேமன் புறாஸ்டரால் அடித்துக் காயப்படுத்தப்பட்ட போட்டியில் தோற்ற பின் உதவி யாளரால் அழைத்துச் செல்லப்படுவதைக்

மனத்துக்கண் மாசிலன் ஆதல்அனைத்து அறன்
ஆகுல நீர பிற -குறள்

வலம்புரி

## பிறக்கின்ற புத்தாண்டில் சமாதானம் மலரட்டும்

இன்று தமிழ்- சிங்கள புதுவருடம். பழையன கடந்து புதிய உத்வேகத்துடன் மக்கள் தங்கள் வாழ்வை ஆரம்பிக்கின்ற திருநாள். எங்கும் மங்களம் பொங்கி மனநிறைவோடு புதுவாழ்வை ஆரம்பிக்கின்ற இப் புத்தாண்டில் நிலையான சமாதானம் கிடைத்து மக்கள் மனநிறைவோடு வாழ அனைவரும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்வது அவசியமாகும்.

இலங்கைத் திருநாட்டில்வாழும் தமிழ்-சிங்கள மக்கள் தங்கள் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களில் ஒத்த இயல்புகளைக் கொண்டுள்ளனர். பிறப்பு முதல் இறப்பு வரையான சடங்குகள், வாழ்வியல் யாவற்றிலும் தமிழ்-சிங்கள மக்களிடையே நிறையஒற்றுமையுண்டு . அந்த ஒற்றுமைக்குச் சான்றாக சித்திரைப்புத்தாண்டு விளங்குகின்றது.

தமிழர்களும் சிங்களவர்களும் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுகின்ற நிகழ்வானது இரு இனத்தினதும் இணைப்புடைய கலாசாரப்பண்பாட்டைச் சுட்டி நிற்கின்றது.

மொழியால், இறை வழிபாட்டால், சமய சடங்கால் ஒத்திசைவான போக்கைக்கொண்ட தமிழ்-சிங்கள இனமக்கள் தங்களின் உறவுகளை வளர்த்துக்கொள்வதற்கு இனவாதம் கொண்ட ஆட்சியாளர்கள் தடையாக இருந்தனர். இதன் காரணமாக இரு இன மக்களும் ஒருவரையொருவர் வெறுப்போடு பார்க்கின்ற இயல்பை வலிந்து பெற்றுக்கொண்டனர். இதனால் சிங்கள இனம், தமிழினம் என்ற பேதமை வளர்ந்து உச்சம் பெற்றது. காலத்திற்குக் காலம் உச்சத்தின் உக்கிரம் தாண்டவமாடி தமிழினத்தின் உடைமைகளை, உரிமைகளை காவு கொண்டது. சிங்கள மக்கள் ஆளப்பிறந்தவர்களென்ற வக்கிர உணர்வை அரசியல் வாதிகள் ஊட்டிவிட்டதனால் தமிழினம் அடிமைப்பட்ட இனமாக மாற்றப்பட்டது.

நீண்டகால யுத்தம் இந்த நாட்டில் மனித மனங்களைச் சின்னாபின்னமாக்கியது. ஒரு நாட்டிற்குள் வேற்று நாட்டு யுத்தம் போல் நடத்தி தனது நாட்டுப்பிரஜைகளை, தமிழினத்தின் பெயரால் கொன்றொழித்த கொடுமை வேறு எங்கும் நிகழாத வரலாறு. எறிகணைத் தாக்குதல், யுத்தவிமானக்குண்டு வீச்சு, பல்குழல் தாக்குதல், பீரங்கி முழக்கம் என தமிழினத்தை அழிக்க சிங்கள ஆட்சியாளர்கள் நடத்திய கொடூரத் தாண்டவத்தை எண்ணும்கால் சீ.... இப்படியும் ஒரு இன வாதமா? என்ற கேள்வி மனித குலத்தை தலை குனிய வைக்கின்றது.

தமது பதவிக்காக, வக்கிர இன உணர்விற்காக ஏழை மக்களைக்கொன்றொழித்து சுகபோக சீவியம் நடத்திய மனிதநேயமற்ற ஆட்சியா ளர்களின் கொட்டம் இந்த மண்ணில் தொடர்வதற்கு இடமில்லை என்ற உறுதியை சிங்கள மக்கள் கடந்த காலங்களில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதனால் இனவாதம் கக்கியவர்கள் தங்கள் வியூகங்களை மாற்றி சமாதானம் என்ற கோசத்தோடு ஆட்சிப்பீடம் ஏறுகின்றனர். இதிலும், மக்களை ஏமாற்றும் திட்டங்கள் இருக்குமாயின் -தொடர்ந்தும் தமிழினத்தை அடிமைப்படுத்தும் சிந்தனை உருப்பெறுமாயின் அதன் விளைவு அழிவு என்பதை உணர்ந்து கொண்டு மனிதநேயத்தின் பேரால் பிறக்கின்ற புத்தாண்டில்எல்லா இன மக்களும் இன்புற்று வாழ்வதற்கான சமாதான வழியை அடைய அனைவரும் பாடுபடவேண்டும்.

வெறுமனே வார்த்தைகளில் மட்டும் சமாதானம் என்பதை உச்சரிப்பதோ, அல்லது சர்வதேச நாடுகளை சமாளிப்பதற்காக சமாதானம் எனக்கூறுவதோ நாட்டை அழிவிலிருந்து பாதுகாக்காது என்பதால் உண்மைச் சமாதானத்தை அடைய அரசு உறுதிபூணவேண்டும்.

# வீண் விபரீதங்களுக்கு வித்திட்டுள்ள விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவி

(கொழும்பு)

சனியன்று நடைபெற்ற அமைச்சரவை பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொள்ளாமல் ஜே.வி.பியினர் பகிஷ்கரிப்புச் செய்துள்ளனர். அத்துடன், பொ.ஐ.மு. எம்.பியான அர்ஜுண ரணதுங்கவும் தனக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். மேலும் கோட்டேயில் தனக்கு கிடைத்த ஆசனத்தையும் இராஜினாமா செய்துவிட்டு பாராளுமன்றில் ஒரு அங்கத்தவராக மாத்திரமே இருக்கப் போவதாகவும் அர்ஜுண தெரிவித்திருக்கிறார்.

ஜே.வி.பியினர்க்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட அமைச்சுப் பொறுப்பை இறுதிநேரத்தில் வழங்காமல் விட்டதும் முன்னரே அர்ஜுணவிற்கு உறுதியளிக்கப்பட்ட விளையாட்டுத்துறை அமைச்சை வழங்காததாலும் அன்றைய பதவியேற்பு வைபவத்தில் பிரச்சினைகள் பல ஏற்பட காரணமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### வழங்கப்பட்ட உறுதி இறுதி நேரத்தில் இரத்து

முதலில் ஜே.வி.பியினருக்கு மகாவலி அமைச்சை வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டிருந்த போதும் . பின்னர் இறுதி நேரத்தில் அது இரத்துச் செய்யப்பட்டது. மகாவலி அமைச்சினை பெயர் மாற்றம் செய்து ஆற்றுவள அபிவிருத்தி அமைச்சு என்ற பெயரில் முன்னாள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை அமைச்சராக இருந்த மைத்திரி பால சிறிசேனவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு இரு பிரதியமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்கூறிய புதிய பெயரிடப்பட்ட அமைச்சிற்கு ஒருவரும் மகாவலி அமைச்சு என்பதன் பெயரில் இன்னொரு பிரதியமைச்சரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் இலங்கைக் கிரிக்கெற் அணித் தலைவரான அர்ஜுண ரணதுங்க ஜனாதிபதியுடன் ஏற்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையிலேயே தான் பொ.ஐ.முன்னணியில் இணைந்தேன் என்றும் விளையாட்டுத் துறைக்கு தனது சேவை தேவை எனக்கூறிய ஜனாதிபதி அந்த அமைச்சைத் தனக்கு அளிப்பதாக உறுதியளித்திருந்ததற்கமைய இம்முறை தான் கடுமையாக உழைத்ததாகவும் ஆனால் என்னைவிட இன்னொருவர் இதற்கு சிறப்பானவர் என ஜனாதிபதி நம்புகிறபடியால் நான் அதிலிருந்து விலகுவதே பொருத்தம் என்றும் தெரிவித்துள்ள அர்ஜுண, இறுதியில் ஜனாதிபதி தனக்கு அனுரா பண்டார நாயக்கவின் அமைச்சுக்களின் பிரதியமைச்சுப் பொறுப்பை அளித்திருப்பதாலேயே தான் அதை ஏற்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இறுதியாக விளையாட்டுத்துறை அமைச்சு ஜீவன் குமாரதுங்க வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தற்போது விளக்கமறியலில் இருந்துவரும் திலங்க சுமதிபால, ரணதுங்கவிற்கு விளையாட்டமைச்சு வழங்காமல் விட்டால் மட்டுமே ஹெல உறுமயவின் ஆதரவைப் பெறமுடியும் என ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜே.வி.பியினருக்கு உறதியளிக்கப்பட்ட திரைப்படத்துறை, காணிவிவசாயம், நீர்ப்பாசனம், மகாவலி அபிவிருத்தி என்பனவற்றை ஜனாதிபதி இறுதியில் மகாவலி அபிவிருத்தி பெயர் மாற்றியுள்ளதாகவும் திரைப் படத்துறையை தானே வைத்திருக்கப்போவதாகவும் ஜே.வி. பியிற்கு அறிவித்தார். இதனால் எழுந்த சிக்கலை அடுத்து பதவியேற்பிற்கு முன்னர் மங்கள சமரவீர , அனுரா பண்டார நாயக்க, சுசில் பிரேம ஜயந்த, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஜே.வி.பியுடன் சமரசம் செய்ய முற்பட்டனர். ஆனால், ஜே.வி.பி. - ஸ்ரீ.சு.க. உடன்படிக்கைப் படி தமக்கு வழங்கிய எதையும் தாம் ஏற்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

### ஏன் இந்தப் புறக்கணிப்பு

பின்னர் பொ.ஐ.மு.வைச் சேர்ந்த டிலான் பெரேரா, தினேஷ் குணவர்த்தன, அர்ஜுண ரணதுங்க ஆகியோர் ஜே.வி.பியின் முக்கியஸ்தர்களான விமல் வீரவன்சவையும் நந்தன குணதிலகவையும் அதன் நுகே கொட அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்தினர்.

இவ் உரையாடல் நீண்டநேரம் நடைபெற்றிருப்பினும் ஜே.வி. பியினர் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தனர். தாம் பாராளுமன்றில் வெறும் எம்.பிக்களாக மாத்திரமே இருக்கப் போவதாக தெரிவித்துவிட்டனர். இதனாலேயே பதவியேற்பு வைபவம் பலமணி நேரம் தாமதமடைந்தது.

இதேவேளை, பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை நியமப்பது போன்ற முக்கிய தீர்மானங்களை எடுக்கும் வேளையில் ஜனாதிபதி தம்மை உதாசீனம் செய்துவிட்டார் என ஜே.வி. பியினர் குற்றஞ் சாட்டியுள்ளனர். ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, இது குறித்து ஜனாதிபதிக்கு காரசாரமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் நீங்கள் சிங்கள- பௌத்தர் ஒருவரை பிரதமராக நியமிப்பின் அனுராபண்டார நாயக்க அல்லது மைத்திரிபால சிறிசேனவை நியமித்திருக்க வேண்டும் என்பது எமது விருப்பம் எனத்தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி ஜே.வி.பியின் சம்மதத்துடன் கதிர்காமரை பிரதமராக்குவதென முன்னர் தெரிவித்திருந்தார். பின்னர், ராஜபக்ஷவை பிரதமராக நியமித்துள்ளார்.

அத்துடன், கதிர்காமர் சிங்கள- பௌத்த மக்கள்-பெரும்பாலானோரின் நல் அபிப்பிராயத்தைப் பெற்றவர் என்பதுடன், அவருக்கு சர்வதேச அளவில் பிரபல்யமும் உள்ளது என தெரிவித்துள்ள ஜே.வி.பி., எமக்கு விரும்பியபடி அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனில் பிரதமர் எம் அனைவரினதும் நம்பிக்கையைப் பெற்றிருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளது.

### கடித விபரம்

மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்றதைத் தொடர்ந்தே ஜே.வி.பியினர் இக்கடிதத்தை அனுப்பியுள்ளனர். அக்கடிதத்தில், ஏப்ரல் 5 என திகதியிடப்பட்டிருந்தது.

1971இல் சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான கூட்டு அரசுக்கு எதிராக ஜே.வி.பியினர் முதல் தடவை ஆயுதக் கிளர்ச்சியிலீடுபட்ட 33வது ஆண்டு பூர்த்தி இந்நாள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தினத்தையே ஜே.வி.பி. ஏப்ரலின் எழுச்சி எனும் பெயரில் அன்று சுகததாஸ உள்ளக அரங்கில் கொண்டாடியது. இதேவேளை, ஸ்ரீ.சு.க. அரசாங்கம் விசுவாசமாகவும் முறைப் படியும் செயல்லாற்றாவிடில். அதன் பின் விளைவுகளை அனுபவிக்க வேண்டிவரும் என கடந்த சனியன்று ஜே.வி. பியின் தலைவர் சோமவன்ச எச்சரிக்கை விடுத்திருந்தார். அல்லாவிடில் தாம் மக்களின் உரிமைக்காக மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோம்என்றும்ஸ்ரீசுகவை விட தாம் அதிகளவு வாக்குகளை பெற்றமைக்கான காரணம் இவர்கள் விசுவாசமாகவும் நாட்டுக்காகவும் உழைத்ததே என்றும் சோமவன்ச தெரிவித்தார். (உ-6)

# அடிக்கடி மின் தடங்கல் வியாபாரிகள் பெரும் அல்லல்

(கல்வியங்காடு)

புத்தாண்டுக்கு முதல் தினமான நேற்றும் நேற்றுமுன் தினமும் யாழ். குடாநாட்டுக்கான மின் விநியோகத்தில் அடிக்கடி தடங்கல் ஏற்பட்டமை குறித்து பொது மக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, புத்தாண்டு வியாபாரம் களைகட்டியிருந்த வேளையில் இவ்வாறு அடிக்கடி மின் தடங்கல் ஏற்பட்டமையானது தமது வியாபார நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தியதாகவும், கள்வரியின் கைவரிசைக்கு வழிசமைப்பதாக அமைந்ததாகவும் வர்த்தக நிலைய உரிமையாளர்களால் விசனம் தெரிவிக்கப்பட்டது.

இது தவிர மின்சாரசபையின் திட்டமிடப்படாத செயற்பாடே இவ்வாறான சம்பவங்களுக்குக் காரணம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-74)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

என்னை ஆன்மாவுடன் ஒன்றுபடுத்தி கொள்வதே செயல் முறை மதம். தவறாக ஒன்றுபடுத்திக் கொள்வதை விடுங்கள். அதில் நீங்கள் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறீர்கள்? நீங்கள் இலட்சம் ஆயிரம் மருத்துவ மனைகள் கட்டியிருக்கலாம். ஐம்பதாயிரம் சாலைகள் அமைத்திருக்கலாம். ஆனால் நீங்கள் ஆன்மா என்று உணராவிட்டால் இவற்றால் என்ன பயன்? நாயின் உணர்ச்சிகளுடன் நாயைப் போல் சாகிறீர்கள். தான் ஜடம் அழிந்து விடப் போகிறோம் என்று நினைப் பதால் தான் நாய் அழுகிறது ஊளையிடுகிறது.

சுவாமி விவேகானந்தர்.

# அடிக்கடி ஏற்படும் மின் தடங்கலுக்கு அதிகரித்த மின்பாவனையே காரணம்

## மின்சாரசபை வட்டாரங்கள் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அடிக்கடி மின்தடங்கல் ஏற்பட வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களே காரணம் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

புதுவருடத்தை ஒட்டி வர்த்தக நிலையங்களில் வியாபாரம் சூடு பிடித்துள்ளதால் இரவு, பகல் பாராது நீண்ட நேரம் மின் பாவிக்கப்படுகின்றது.

அத்துடன்,வீடுகளிலும் வழமையைவிட கூடுதலான நேரம் கூடுதலான அளவு மின்சாரம் பாவிக்கப்படுகிறது.

மின் பிறப்பாக்கியின் கொள்ளளவுக்கு மீறிய இந்த அதிக சுமை காரணமாகவே மின்சாரம் அடிக்கடி தடைப்படுகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தானாகவே அது தடைப்படுவதற்கான ஏற்பாடுகள் உண்டு

மற்றும்படி, மின்சாரசபை தனது நடவடிக்கைகளை ஒழுங்காக வழமைபோன்று நேர்த்தியுடன் ஆற்றிவருகிறது. இது விடயத்தில் பொதுமக்கள் எம்மீது அதிருப்தியடைய வேண்டிய தேவையில்லை என மின்சாரசபை வட்டாரங்கள் இது பற்றி மேலும் விளக்கமளித்தன. இதேவேளை அதிகரித்த மின்பாவனை தொடருமானால் மேலும் மேலும் மின் தடங்கல்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (உ)

### வெடிபொருட்கள் பறிமுதல்

(வவுனியா)

சட்ட விரோதமாக விற்பனை செய்த ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வெடிபொருட்களை வவுனியா பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

பதிவு செய்யப்படாமல் சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்பட்ட இந்த வெடிபொருட்கள் பல்வேறு பகுதிகளிலும் பகுதி பகுதியாக வைத்து விற்பனை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-64,10)

### திருப்பணி

(தொல்புரம்)

தொல்புரம் கொட்டடியம்பதி ஆதிமுத்துமாரி அம்மன் ஆலய மஹோற்சவத்தையொட்டி ஆலயத்தின் திருப்பணி வேலைகள் மிகத்துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. (உ-70)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.:
021 222 3916
0777 801038
கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER ஸ்வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 222 3214
E.mail: smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி,
காரைநகர் T.P:
0602212472

# பெய்ரூட் முகாமில் கருணா தலைமறைவு?

(கொக்கட்டிச்சோலை)

விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண முற்றுகையினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கருணா தொப்பிக்கல காட்டுப் பகுதியில் தலைமறைவாகியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொப்பிக்கல காட்டுப்பகுதியில் மறைவிடம் ஒன்றிலுள்ள பெய்ரூட் முகாமில் மறைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கும் அதேவேளை கருணா கொழும்பிற்குத் தப்பியோடிவிட்டதாகவும், அங்கிருந்து வெளிநாடுசெல்லத் தயாராகிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# கருணாவிற்கு புகலிடம் அளிக்க இலங்கை அரசு தயார்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையினால் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து விலக்கப்பட்ட முன்னாள் தளபதி கேணல் கருணா கோரினால் அவருக்கு புகலிடம் அளிக்க இலங்கை அரசு தயாராக இருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கேணல் கருணாவை கிழக்குமாகாண காட்டுப்பகுதி ஒன்றிலிருந்து ஹெலிமூலம் இலங்கை இராணுவம் அழைத்துச் சென்றது என்று வெளிவந்த செய்தி வெறும் வதந்தி என்றும் சிறில்ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க புலிகளினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கருணாவுக்கு எவரும் பாதுகாப்பு வழங்கக்கூடாது என்று புலிகள் அறிவித்துள்ள நிலையில் இலங்கையரசு கருணாவுக்கு பாதுகாப்பு வழங்குமாக இருந்தால் அது அரசு-புலிகள் உறவைப் பாதிக்கும் எனத்தெரிவிக்கப்படுகிறது.(ம)

# மட்டக்களப்பிற்குத் திரும்புமாறு வர்த்தகர்களுக்கு அழைப்பு

(கிளிநொச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட வர்த்தகர்கள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் மீண்டும் மட்டக்களப்புக்குத் திரும்புமாறு விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கிழக்குப் பல்கலைக்கழகம், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கல்வியியற் கல்லூரி ஆகியவற்றிலிருந்து வெளியேற்றப்பட்ட பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரையும் திரும்பவும் அங்கு வருமாறு விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடபகுதியைச் சேர்ந்த வர்த்தகர்கள் சில மணி நேர அவகாசத்தில் மட்டக்களப்பில் இருந்து கருணா குழுவினரால் வெளியேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# போராளிகள் மூவர் வீரச்சாவு

(கிளிநொச்சி)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் கடந்த 9ந் திகதி கருணா அணியுடனான சமரின் போது மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். லெப்ரினன் பொதிகைத் தேவன் (வேலு பாண்டியன் கரடியனாறு மட்டக்களப்பு), 2ம் லெப்ரினன் சங்கொலியன் (கந்தசாமி அருட்செல்வன் கொக்கட்டிச்சோலை மட்டக்களப்பு), வீரவேங்கை மலர்குமரன் (தங்கராசர் குகன் கரடியனாறு மட்டக்களப்பு) ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்களாவர். (ச)

# 'தமிழ் அலை' வெளிவரும்

(கொக்கட்டிச்சோலை)

கொக்கட்டிச்சோலையில் கருணா அணியின் கட்டுப்பாட்டின் கீழ் வெளிவந்த தமிழ் அலை பத்திரிகை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததையடுத்து இன்று முதல் வழமைபோல் வெளிவரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கருணாவின் கட்டுப்பாட்டு...

கம் மாகாநாட்டு மண்டபம், சோலையகம், மீனகம் முகாம் பகுதிகள் அனைத்திலும் இருந்தும் கருணா அணியினர் காட்டுக்குள் தப்பியோடிவிட்டனர். இதனையடுத்து அப்பகுதிகள் யாவும் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

கருணா அணியில் இருந்த ஆயிரக்கணக்கான ஆண், பெண் போராளிகள் ஆயுதங்களுடனும், ஆயுதங்களின்றியும் தப்பித்துவந்து விடுதலைப் புலிகளின் அணியில் இணைந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளுடன் இணைந்த பெண்போராளி வேணுகாவின் தகவலின் பிரகாரம் கருணா தம்மைத் தப்பிச்செல்லுமாறு பணித்ததாகவும் அல்லது தம்முடன் வருமாறு அழைத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

கருணா அணியைவிட்டு விலகி வந்த போராளிகள் தம் பெற்றோருடன் இணையவந்தபோது தாம் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் என்று அடையாளம் காட்டுவதற்காக இடுப்பில் கறுப்புப்பட்டி அணிந்துகொண்டு வந்ததாகவும், அப்போது தம் பிள்ளைகளை இனம்கண்டுகொண்ட பெற்றோர்கள் மலர்ந்த முகத்துடன் அவர்களை அரவணைத்துக் கொண்டதாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நகரமும் அதன் சுற்றுப்புறங்களும் கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி, கரடியனாறு ஆகிய பகுதிகள் விடுதலைப் புலிகள் வசமானபின், கருணா அணியினை அங்கு காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கருணாவும் அவரது நெருங்கிய சகாக்களும் மீனக முகாமில் இருந்து தப்பியோடியுள்ளதாக விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான கரிகாலன் சுவிஸிலிருந்து தமிழ் நெட் செய்தி நிறுவனத்திற்கு தகவல் கொடுத்துள்ளார். கருணாவின் பிடியில் சிக்கியிருந்த தனது சகோதரர் விடுவிக்கப்பட்டு வீடுவந்து சேர்ந்திருப்பதாக தெரிவித்துள்ளதுடன், தனது வெளிநாட்டப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் மட்டக்களப்பில் அரசியல் பணிகளில் ஈடுபடப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)


# கருணா...

வது,

விடுதலைப்புலிகளின் வன்னித் தலைமையகப் படையணியின்கிழக்கு மாகாண முற்றுகையையடுத்து கருணா என்னவானார் என்ற நிலை தெரியாதுள்ளது. அவர் எங்கு ஒளித்திருக்கின்றார், யார் பாதுகாப்பு வழங்குகிறார்கள் என்று எந்தவிதமான விபரங்களும் கிடைக்கவில்லை என்றும் ஆனால் கருணா தனது எதிர்ப்பை முற்றாகக் கைவிட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐரோப்பியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவினருடன் விடுதலைப்புலிகள் இன்று அவசர சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளனரென்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதித்தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார். (ம)

அன்பர்கள், நண்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எம் இதயம் கனிந்த சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்
சொலெக்ஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்


☐ பிறேம் அற்ற (Rimlees) மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
☐ உங்கள் கண்களைப் பரிசோதித்து கவர்ச்சிகரமான பிறேம்களில் கண்ணாடிகளை பொருத்திப் பெற்றுக் கொள்ளவும்.
☐ பல் சம்பந்தமான சகல ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும்
☐ சங்குப் பற்களை மிகவும் கவர்ச்சிகரமான முறையில் கட்டிக் கொள்ளவும்.
☐ மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து சீர் செய்து கொள்ளவும்.
உங்கள் ஒரே தெரிவு
SOLAX OPTICAL & DENTOL
516, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D. முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 7631

காரைநகர் வாரிவளவு ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய
இரதோற்சவம் 13.04.2004 (செவ்வாய்க்கிழமை)

வசந்த மண்டபப்பூசை பி.ப. 1.00 மணி
தேருக்கு சுவாமி எழுந்தருளல் பி.ப. 3.30 மணி
தேர்ப்பவனி ஆரம்பம் பி.ப. 5.05 மணி.
(C/116)
விளம்பர அனுசரணை:- இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்

சுதர்சன் ஓடியோ, வீடியோ
றெக்கோடிங் சென்ரர்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
எம்மிடம் வீடியோ பிரதிகள் CD என்பவற்றையும்
திருமண வைபவங்களிற்கான அனைத்துப்
பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

சென். பீற்றர்ஸ் தேவாலயத் திறப்பு
மகிழ்வில் இணைகின்றோம்
யாழ். மத்திய கல்லூரியின் உருவாக்கத்துக்கு
கால்கோளமைத்து வைத்து இன்றும் புகழ்பூத்த
தேசியக் கல்லூரியாகத் திகழ
காரணகர்த்தாக்களாகிய மெதடிஸ்த சபையின்
சென். பீற்றர்ஸ் தேவாலயம்
மீண்டும் புனரமைப்புப் பெற்று திறந்து வைக்கப்படும்
இந்நாளில் எமது கல்லூரிச் சமூகம் சபையின்
மகிழ்வில் இணைந்து கொள்கின்றது.
அதிபர், ஆசிரியர், மாணவர்,
கல்லூரி அபிவிருத்திச் சபை,
பழைய மாணவர் சங்கம்
(சி-114)